# சத்திய வேத
# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை — பிரிதசதம் 12 | 36-ம் இலக்கம்


# பாவசங்கீர்த்தன முத்திரையைப் பாப்புவும் மாற்றமுடியாது

"பாவசங்கீர்த்தன முத்திரை உடைக்க முடியாதது; பாவசங்கீர்த்தனம் குருவானவர் பாவசங்கீர்த்தனத்தில் கேட்ட இரகசியத்தை வெளியிடப் பாப்புவுமே உத்தரவு கொடுக்க முடியாது" என ரோமையில் பச்சாத்தாப நிர்வாகசங்க அதிகாரியொருவர் கூறினர். பிரான்சில் கொலைக்குற்றத்துக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனுடைய மாமனர் பாப்புவைச் சந்தித்து, பாவசங்கீர்த்தன இரகசியக் கடமையிலிருந்து குருவானவர் ஒருவரை நீக்கிவிடும்படி கேட்கப் போவதாகக் கூறிய செய்தியைக் குறிப்பிட்டு மேற்கண்டவாறு அவ்வதிகாரி கூறினர்.

மார்செல்ஸ் பட்டணத்துச் சிறை விசாரணைக்குரு லிமொசின் சுவாமிகள் நீதிமந்திரிக்கு, குற்றவாளியாகத் தீர்ப்புப் பெற்றிருக்கும் பிரான்சிஸ்கோ அரஞ்சியோ நிரபராதியென எழுதியபொழுது பரபரப்பு உண்டானது. தமது கூற்றுக்கு அவசியமான சாட்சிகளையும், உருசுக்களையும் வெளிப்படையாகக் கூறமுடியாது. ஏனெனில், அவை பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தப்பட்டவை எனவும் கூறினர்.

நகை வியாபாரியான வான்மெல் என்பவருடைய கொலையில் சம்பந்தப்பட்டதாக அரஞ்சியோ தீர்ப்பளிக்கப்பெற்று ஆயுட்தண்டனை பெற்றிருக்கிறர். லிமொசின் சுவாமியார் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் கூறியதாவது: நிச்சயமான அசைக்கமுடியாத உண்மையுள்ள வழிகளால் பிரான்சிஸ்கோ பூரண நிரபராதி என்பதை நான் அறிவேன். இதை எனக்கு வெளிப்படுத்தியவரை நான் நன்கு அறிந்திருக்கிறேன். ஆனல், பூரண இரகசியமாய்க் காப்பாற்றப்படும் என்ற உறுதியின் பெயரில் மாத்திரம் அவர் யாவற்றையும் கூறியிருக்கிருர். நான் எவ்வளவோ பரிந்து கேட்டும் இக்கடிதத்தில் உள்ளவைகளை மாத்திரம் எழுதவும், இவைகளை வாசித்தபின் மாத்திரம் கடிதத்தை அனுப்பவும் உத்தரவு அளித்தார்.

இதைவிட அதிகம் கூற அனுமதி இல்லை; ஆயினும் நிரபராதிக்கு நீதி கிடைக்கும் வண்ணம் ஒரு குருவானவருடைய பேச்சு மதிப்புப்பெறுமென நான் நம்புகிறேன்.

பாவசங்கீர்த்தன வேளையில் அறிந்தவைகளை ஒரு குருவானவர் பாவசங்கீர்த்தனத்துக்கு வெளியே உபயோகிக்க முடியாது. பாவசங்கீர்த்தனம் பண்ணியவர் மாத்திரமே அந்த அனுமதியைக் குருவுக்கு அளிக்கலாம். அளித்தாலும் இரகசியத்தை வெளிப்படுத்துவது தேவதிரவிய அனுமானத்தை வெறுக்கக் காரணமாயிருக்கும் எனக் கண்டால், அவர் அதை வெளிப்படுத்தாதுவிடலாம். பாவசங்கீர்த்தன இரகசியக் கடமை எவ்வளவு கண்டிப்பானதென்றல் உயிருக்கு ஆபத்தோ, பொதுசனருக்குத் துன்பமோ உண்டாவதாய் இருந்தாலும்கூட இரகசியத்தை வெளிப்படுத்த முடியாது.

## நாடிழந்த மக்கள்மட்டில் வத்திக்கான் அனுதாபம்

நாடிழந்து தவிக்கும் மக்களைப் பாதுகாக்கும் நற்பணியில் முனைந்து நிற்கின்றது வத்திக்கான். பரிசுத்த தந்தையின் பிரதிநிதி சங். ஹென்றி டிரியட்மாட்டன் சுவாமிகள் ஐ. நா. சபையில் கூறினர்: "நாடிழந்து அகதிகளாக அவதியுறும் மக்களுக்கு உதவியளிக்க ஐ. நா. சபை ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஆனல், அவர்களது உதவிக்காக ஐ. நா. ஒரு முடிவைக் கொண்டு வருகையில், அவர்களை எவ்வாறு நாடற்றவர்களாக ஆக்கலாம் என்ற பிரச்சினையில் தலையிடக்கூடாது" என்று ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. டாக் ஹாமர்ஷோல்டை அவர் கேட்டுக்கொண்டார். தன் முதல் கவலையும், கவனமும் அகதிகளின் உதவியைப்பற்றியதே என்று வத்திக்கான் வலியுறுத்தி வருகின்றது.

# வத்திக்கான் பொதுச்சங்க ஆலோசனை விடயங்கள்

வத்திக்கான் பொதுச்சங்க ஆயத்தகுழுவின் செயலாளர் மொன்சிஞ்ஞோர் பெலிசி நடக்கவிருக்கும் சங்கத்தில் ஆலோசனைக்கு எடுக்கவிருக்கும் விடயம் பற்றிப் பேசுகையில்: திருச்சபைச் சட்டங்கள், விசுவாசம், தேவவெளிப்படுத்தல்களின் ஊற்று, ஒழுக்க சமுதாய கிரமங்கள், குருமாரைச் சார்ந்த கட்டுப்பாடுகள், துறவிகள் இல்லறத்தாரைச் சார்ந்தவை, வேத அர்ச்சிப்பும் விருத்திச் சேவையும், ஞானவிசாரணை விடயங்கள், தேவதிரவிய அனுமானங்கள் கைக்கொள்ளுதல், இந்நாட்களில் காத்திரமிக்க வேதப்பரப்புதற் சேவை ஆதியன இடம்பெறும் என்று கூறினர்.

கூடவிருக்கும் சங்கம் திருச்சபையின் போதனையை அழுத்தந் திருத்தமாய்க்கூறும்; குருத்துவ, கிறிஸ்துவ வாழ்க்கையின் விருத்தி, சேவாமுறைகள் யாவும் திருச்சபைச் சட்டத்திருத்தத்துக்கு அடிகோலும். கிறிஸ்துவின் பெயருடன் திருச்சபைக்கு வெளியேயிருப்பவர்கள் ஒன்றுசேருதல்—நல்மனதுடனும் தேவ அருளுடனும் இதுகைகூடும்.

முன் எந்தச் சங்கத்துக்காகுதல் இத்துணை நுட்பமான ஆயத்தம் நடக்கவில்லை; 2,594 மேற்றிராணிமார், 156 துறவறசபைத் தலைவர்,கள் 62உயர்கல்வி [illegible]நாபனங்களினது ஆலோசனை கேட்கப்பட்டது. இவ்வாலோசனைகள் அடங்கிய 15 பாகங்களிலும் தற்காலத் திருச்சபையின் உயிர்த்துடிப்பு விளங்குகிறது. ஆராயப்பட்ட விடயங்கள் திருச்சபையின் உடனடியான கருத்தைக் கவருபவை; ஒற்றுமை, உண்மை, அன்பு ஆதியாம் திருச்சபை இலட்சணங்களைத் தெளிவுபடுத்துபவை.

## பாப்பரசரின் பொதுநிருபத்தை நேரு பாராட்டுகிருர்

புதிய 5 வருடத்திட்ட விவாதத்தை லோகசபையில் ஆரம்பித்து வைத்துப்பேசிய இந்தியப் பிரதமர் நேரு, பாப்பரசர் அண்மையில் வெளியிட்ட "அன்னையும் ஆசிரியையும்" என்ற சமூகப் பொதுநிருபம் இன்றைய உலகின் தேவைக்கு ஏற்ற ஒரு நிலையை ஏற்படுத்த அது சிறந்தவோர் முன்மாதிரிகையாகத் திகழ்கின்றது என்று கூறினர். தற்பொழுது, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக விவாதிக்கப்படும் 5 ஆண்டுத் திட்டத்தையும், இதுவரையும் மதிப்பீடு செய்யப்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பற்றிப் பேசும்போதே இவ்வாறு கூறினர்.

# லூர்து புதுமை

தெயா ஆஞ்ஜெலா என்ற பெண்ணைத் திமிர்வாதம் 1944-ம் ஆண்டு படுக்கவைத்தது, அன்று அவளுக்கு வயது 23. சிறந்த வைத்தியர்களும் "குணம்பெற இயலாத ஒரு வியாதி" என அவளைக் கைவிட்டனர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அவள் லூர்து நகருக்கு 1950-ஆம் ஆண்டு கொண்டு வரப்பெற்றுள். அதே ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் முற்றும் சுகமடைந்தாள். அவளைக் கைவிட்ட மருத்துவர் "இவள் மருத்துவக் கலையால் சாதிக்க முடியாத வகையில் குணமடைந்தாள்" என்றனர். லூர்து நகரைத் தம் ஆட்சிக்குள் கொண்டுள்ள அருட்பெருந்தகை தேயாஸ் ஆண்டகை அவர்கள் இவ்வாண்டு இப் புதுமையை அதிகார பூர்வமாக அங்கீகரித்துக் கூறினர்: "ஆஞ்ஜெலா குணம் பெற்றது ஒரு புதுமைதான். அமல அன்னையின் வல்லமையால் நடந்த ஒரு புதுமை இது." தெயா ஆஞ்ஜெலா இன்று சங். மரிய மெர்ஸெடெஸ் சகோதரி.

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

## புதுநிருபம் — தந்தைக்குப் பாராட்டு

"'அன்னையும் ஆசிரியையும்' என்னும் தங்களின் புது நிருபத்தில் தாங்கள் அளித்துள்ள அரிய போதனையைக் கண்டு பெரும் மகிழ்வுற்றேன்" என்று தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டின் தலைவர் அலெசாந்திரி, பரிசுத்த தந்தைக்கு வாழ்த்து அனுப்பியுள்ளார். பிரான்ஸ் நாட்டிலே புது நிருபத்தின் 350,000 பிரதிகள் இதுவரை விற்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## கொம்யூனிசம்பற்றிக் கூட்டாராய்வுக் கழகம்

"எமது அயலானை—அவன் யாராயிருந்தாலும்—நேசிப்பது, நாம் கடவுளை நேசிப்பதுபோல் முக்கியமானது. இது எமது திவ்வியகர்த்தரின் போதனையாகும். எனவே, எம் ஒவ்வொருவருக்கும் பாரதூரமான கடமை ஒன்று சுமத்தப்பட்டிருக்கின்றது" இவ்வாறு மிக வந்தனைக்குரிய கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவரவர்கள் நாயககந்த என்னுமிடத்தில் நல்லாயன்பாடசாலையில் கொம்யூனிசம்பற்றி ஆராயக் கூடிய மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த மாநாடு, "மக்களின் ஆன்மாக்களுக்கான போராட்டம்" எனும் நாமம் பூண்டது. இம்மாநாடு நாயககந்தாவிலும், வத்தளையிலுமுள்ள மரியாயின் சேனையாளரால் வெகுதிறமையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 200-க்கு மேற்பட்டோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

நாயககந்த கட்டளைக்குரவரான வண. ஜே. எல். மிக்குயே சுவாமி அவர்கள் பாப்பரசரின் கொடியை உயர்த்தி மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். 19-8-61இல் நடைபெற்ற சம்பாஷணைகளில், கொம்யூனிஸ்த கொள்கைகளில் பொதிந்துள்ள அபத்தத்தையும், பொய்வாதங்களையும், மாறுபட்ட கருத்துக்களையும் எடுத்துரைத்தார் திரு. விக்ரர் குணவர்த்தன. இரண்டாவதுநாள் நிகழ்ச்சிகளில் உரையாற்றிய திரு. ஜி. குருகுலசூறியா கொம்மியூனிச போர்முறை பற்றிப் பேசினர். அவர் தமது உரையில், கொம்யூனிஸ்தர் கையாளும் தந்திரமான போர்முறைகள் பற்றியும், இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்ற அவர்கள் அச்சமின்றி எடுத்துவரும் தந்திரமான நடபடிக்கைகளையும்பற்றி எடுத்துரைத்தார். இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் திவ்விய பூசையுடன் ஆரம்பமாயின. வண. போல கஸ்பேர்ஸ் சுவாமியார் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்றைய நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் பேசிய வண. கஸ்பேர்ஸ் சுவாமியார் அவர்கள், "கொம்யூனிசமும் சமயமும்" எனும் விடயம்பற்றி உரை நிகழ்த்தினர். மிகவும் ஆராய்வாகவும், பல எடுத்துக்காட்டுகளுடனும், கொம்யூனிசமும் சமயமும் வட, தென் துருவங்கள் போன்றவை என்று விளக்கினர்.

"கொம்யூனிசத்தைப்பற்றி அக்கறை வேண்டாம். ஏனெனில், அது சமய நம்பிக்கைகளுடன் போட்டியிட முடியாது. கத்தோலிக்க சமயக்கொள்கைகளுடன் மாத்திரமல்ல, இந்து, இஸ்லாம், பௌத்தமதங்களின் கொள்கைகளுடனும் போட்டிபோட முடியாது — ஒப்புநோக்கவும் முடியாது.

"கொம்யூனிஸ்தரின் சமூக கொள்கைகளுக்கு — சமுதாயக்கொள்கைகளுக்குப்பதில்" என்னும் விடயம் பற்றி உரைநடாத்திய வண. ஷிறும் ஓ. எம். ஐ. சுவாமியார், கத்தோலிக்கன் ஒவ்வொருவனும், கிறிஸ்துமதம் போதிக்கும் பிறர்சிநேகம், நீதி எனும் அரியபோதனைகளைச் சீவிய நடைமுறையில் அனுஷ்டித்தால் கொம்யூனிஸ்த சமுதாய கொள்கைகளுக்கு ஏற்றபதில் கொடுக்கலாம் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இரண்டாவதுநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட வண. எஸ். ரி. பாலசூரியா சுவாமியவர்கள் "கொம்யூனிசமும் கத்தோலிக்கமும்" என்னும் விடயம்பற்றிப் பேசுகையில், "இலங்கைவாழ் கத்தோலிக்கர் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கும் விடயத்தில் தோல்வியடைந்துவிட்டனர். எப்படியெனில், தாம் அடைந்துகொண்ட விசுவாசத்தைத் தமது பிறசமய அயலாரிடம் பரப்புவதைவிடுத்து, தம்மோடேயே வைத்துக்கொண்டனர். பலநூற்றுண்டுகளாகக் கத்தோலிக்கரின் சனத்தொகையில் குறிப்பிடத்தக்கவிதமாகப் பெருக்கம் ஏற்படவில்லை அதாவது, மனந்திரும்புதல்களின்தொகை திருப்திகரமாக அதிகரிக்கவில்லை. எனினும், போதிய முயற்சிக்குக் காலம் சாதகமாய் இருந்தது" என்று கூறினர்.

தொழிலாளர் தமது கருத்துக்களையும், பிரச்சினைகளையும் ஆராயும் வகையில் பல சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டன.

## ஆயித்தியமலை சதா சகாயமாதா திருப்பதித் திருநாள்

கிழக்கிலங்கையில் "சின்னமடு" என அழைக்கப்படும் மகத்தான யாத்திரைத் திருப்பதியும், சதாசகாயமாதாவின் முதல் ஆலயமுமாகிய, ஆயித்தியமலை சதாசகாயமாதா திருப்பதித் திருநாள் இவ்வருடம் வெகுவிமரிசையாக, கடந்த ஞாயிறு 3-9-61-ல் நிறைவேறியது. இத்திருப்பதியானது மட்டக்களப்பில் இருந்து 18 மைல்களுக்கப்பால் உன்னிச்சை குடியேற்றப் பகுதியைச்சேர்ந்த ஆயித்தியமலை என்னும் கிராமத்தில் செவ்வனே அமைக்கப்பட்டுள்ளது.

சகாய அன்னையின் திருநாளுக்கு ஆயத்தமாக 20-8-61 ஞாயிறு திவ்விய பூசையின்முன், தாண்டவன்வெளி கட்டளைக் குரவரும், ஆயித்தியமலை திருப்பதிப் பரிபாலகருமாகிய வண. G. E. L. வம்பேக் சுவாமி அவர்களால் தேவதாயின்கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

தொடர்ந்து திருநாள் தினம்வரை தினமும்மாலை 6 மணிக்கு மாதாவின் பக்தர்களால் நோவனைகள் நடாத்தப்பட்டன. 1-9-61 வெள்ளிக்கிழமை மாலை இத்திருப்பதியில் முதன்முதலாய் திருச்சிலுவைப் பாதைப்படங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து திருமணித்தியாலம், தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம், திவ்வியநற்கருணை ஆசீர்வாதம், திவ்விய பூசை நிறைவேறியன. 2-9-61 சனிக்கிழமை திருநாளுக்கு முந்திய தினம் காலை யாத்திரிகர்களுக்கான திவ்விய பாடற்பூசையும், காலை 10 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடிச் சகாய அன்னைக்கு நவநாட்செபங்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அன்றுமாலை கோவில்வளவில் புதிதாய் அழகுற அமைக்கப்பட்ட கல்வாரிமலை ஆசீர்வதிக்கப்பட்டது. மாலை 6-30 மணிக்கு மெழுகுவர்த்தியுடன் திருச்சுரூபத்தைப் பெரியதெரு வழியாகச் செபத்துடனும், பாடல்களுடனும் சுற்றிவந்தனர். சுற்றுப்பிரகாரத்தின் பின் வண. O. P. S. சந்தனம்சுவாமி அவர்களால் அரியதோர் பிரசங்கம் சொல்லப்பட்டது. பின் வண. F. M. செலர், O. P. S. சந்தனம் சுவாமி அவர்கள் துணைபுரிய மேற்றிராசனப் பிரதம[illegible]ருவாகிய வண. ஜெரோம் டீசா[illegible]வாமி அவர்களால் மகத்தான மாலேஆராதனை, திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது.

3-9-61 ஞாயிறு திருநாள் நிறைவு தினம் காலை 5-30 மணி தொடக்கம் திவ்வியபூசைகள் நடந்தேறின. காலை 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் திருநாள்பூசை பிரசங்கத்துடன் நிறைவேற்றப்பட்டது. பூசையின்பின் ஆண்டவர் அவர்களால் சகல நோயாளிகளும் ஆசீர்வதிக்கப்பட்டனர். மத்தியானம் யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு, திருப்பதிப்பரிபாலகர் சுவாமி அவர்களால் சகலருக்கும் தேவதாயின் பெயரால் ஆசீர்கூறப்பட்டுக் கொடியும் இறக்கப்பட்டுத் திருநாள் சந்தோஷமாய் முடிவெய்தியது. இவ்வருடம் ஏறக்குறையப் 10,000 பக்தர்கள் இத்திருப்பதிக்குச் சமுகமாய் இருந்தனர் என்பதும், விசேஷமாய்க் கொழும்பு, நீர்கொழும்புப் பகுதிகளில் இருந்தும் யாத்திரிகர்கள் வந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

—நிருபர்.

## மேற்றிராணியாண்டவரின் அறிவுரைகள்

"நீங்கள் இவ்வுன்னத அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டிருப்பதற்காகக் கடவுளுக்கு நன்றிகூறுங்கள். அத்துடன் உங்கள்சபை அங்கத்தவர்களைப்பெருக்குவதில் முயற்சியாயிருங்கள். யேசுவின் சீவியத்தைச்சீவித்து. வரப்பிரசாதத்தைப்பெற்று வாழ்ந்து வாருங்கள்." மேற்கூறியவாறு யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை O. M. I. அவர்கள் மரியாயின்சேனை நிருவாகஸ்தர்களின் ஒருநாட் சமாகம வேளையின்போது கூறினர். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது: ஞாயிற்றுக்கிழமைப் பத்தியும், பூசையைப் பத்தியாய்ஒப்புக் கொடுப்பதும் மேலாகக் கவனிக்கப்படல்வேண்டும். பொதுவாக வாலர்களும், வாலிபர்களும், பூசையைத் தன்னும் பத்தியாய்க்காணபதில்லை. இந்தக்குறையைநீக்க ஞாயிற்றுக்கிழமைஊழியர்சபைஏற்படுத்திப் பணியாற்றலாம். ஞானோபதேச வகுப்புகள் நடத்தலாம். இக்காலத்தில் பூசைப்பலியையும், தேவதிரவிய அனுமானங்களையும் ஏராளமான கிறிஸ்தவர்கள் அனுபவித்து வரப்பிரசாதத்தில் வர்த்திக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அத்துடன் கிறிஸ்தவர்களும், சிறப்பாக அப்போஸ்தொலிக்க சேவையிலீடுபட்ட நீங்களும் தைரியத்தைக் கைவிடாது துணிந்துநின்று வருந்தி உழைக்கவேண்டும். யேசுவின் சிலுவையைச் சுமந்துகொண்டு அவரைப் பின்பற்றவேண்டும் என்றார்.

சென்றமாதம் யாழ்ப்பாணம் அர்ச். சம்பத்திரிசியார் கல்லூரியில் மேற்படி சேனைச்சமாகமம் நடந்தேறியது. 200-க்கு அதிகமானோர் சமூகமானார்கள். செனத்துஸ் தலைவரும்சமூகம் அளித்திருந்தார். சேனைக்கைப்புத்தகக்கல்வி உபந்நியாசமுறையாக நடத்தப்பட்டது. மாலை ஆசீர்வாதத்துடன் விழாமுடிவெய்தியது.

## சிலாபத்தைச்சேர்ந்த மரியாயின்சேனை ஆரம்பித்துள்ள பெருந்தொண்டு

சிலாபத்தைச்சேர்ந்த அமலோற்பவமாதா கியூறியா குருநாகல் வட்டாரத்தில் எடுததுக்கொண்ட மாபெரும் முயற்சியொன்று தோட்டப்பகுதிகளில் புதிய எழுச்சியையும், அருட்சியையும் ஊட்டிவிட்டது. குருநாகல் பகுதியில் உள்ள தோட்டங்களில் றம்பொடகல, உடப்பொல, கந்தகண்ட நோட்டிங்கில்தோட்டம் எனுமிடங்களில் உள்ள தோட்டவாசிகளுக்கு மரியாயின்சேனை ஊழியர் ஞானோபதேசம் கற்பித்தனர். இக்குழுவுக்கு வண. கயித்தான் பெர்னண்டோபிள்ளை சுவாமியார் தலைமைவகித்தார். மேற்படிகோஷ்டியை குருநாகலில் அதி வண. றெக்ஸ் டயஸ் சுவாமியவர்கள் வரவேற்றார். மேற்கூறிய மரியாயின் சேனைக்குழு, றம்பொடையில் 15 பேரை முதன்நன்மைக்கு ஆயத்தம் செய்தனர். தொடர்பாக எட்டுநாட்கள் முன்கூறிய முயற்சிக்குச் செலவிடப்பட்டன. 30 குடும்பங்கள் தரிசிக்கப்பட்டன. முதியோருக்கு ஞானோபதேசம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. 24 பிள்ளைகளுக்கும், 12 வளர்ந்தவர்களுக்கும் முதன்நன்மையருளப்பட்டது. சங். சகோதரர் போல், எவ். எம். பி. அவர்களும், சகோதரர் பிரான்சிஸ் அவர்களும் வீட்டுத்தரிசனைக்குப் பொறுப்பாயிருந்தனர். இந்த அப்போஸ்தல சேவையைப் பாராட்டிச் சிலாப மேற்றிராணியாரான மேன்மைதங்கிய எட்மண்ட்பீரிஸ் ஆண்டகை அவர்கள் தமது ஆசியை அளித்துள்ளார்கள். இந்த அப்போஸ்தலத்துவ சேவையானது இன்னும் பல இடங்களுக்கும் விரைவில் பரப்பப்படும் என அறியமுடிகின்றது.

## தேவத்தையில் நோயாளர்தினம்

உருக்கமான நெஞ்சையள்ளும் காட்சிகள்கொண்ட மறக்கமுடியாத பொன்னாள். அன்று சனிவாரம் தேவத்தைத் திருப்பதியில் கூடாரத்தினம் என்றுதான் கூறவேண்டும். நாட்டுப்புறங்களிலும், பட்டினத்திலுமிருந்து ஆயிரமாயிரம் மாதாபக்தர்கள் தேவதாயின் திருப்பாதநிழலைத் தஞ்சமென்று வந்துகூடினர். மழையினாலும், சேற்றினாலும் ஏற்பட்ட எல்லாக் கஷ்டங்களையும் நல்மனதோடும், வீரத்தோடும் சகித்துக்கொண்டனர். மறுநாள் ஞாயிறுவாரம். அநேக பூசைப்பலிகள் ஒன்றன்பின்ஒன்றாக ஒப்புக்கொடுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் திருவிருந்தருந்தினர். 30,000-க்கு அதிகமான மக்கள் தீவின் பலபாகங்களிலுமிருந்துவந்து வேண்டுதலில் ஒருமுகமாய்க் குரல்எழுப்பின காட்சி மறக்குந்தரமன்று.

செஞ்சிலுவை வீரரும், சென் யோண் அம்புலன்ஸ் படையினரும், சாரணர்களும, கத்தோலிக்க தாதிமார் தொண்டர் சபையினரும் நோயாளரை வெகு சாக்கிரதையாகப் பராமரித்து அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்துக்கு எடுத்துவந்து இருத்தினர். தேவத்தை மா தேவாலயத்தில் அன்று மாலை நற்கருணை எழுந்தேற்றம் செய்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## இளைப்பாறும் அரசாங்கஊழியர்

55வயதிலே இளைப்பாறச்செய்யும் சட்டம் அரசாங்கத்தால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்போது சுமார் ஏழாயிரம் அரசாங்கஊழியர்கள் வேலையிலிருந்து இளைப்பாறுவார்கள். தொழில்நுட்பம் சம்பந்தப்படாத சிவிலுத்தியோகஸ்தர்முதல் தொழிலாளர்ஈருக உள்ளாரெல்லாம் இந்த ஏழாயிரம்பேரிலும் அடங்குவார்கள். இவ்விதம் இளைப்பாறும் அரசாங்க ஊழியர்களுக்குப் பென்ஷன்கொடுக்க அரசாங்கத்திற்கு இரண்டுகோடிரூபா செலவாகும்.

## பரீட்சைப்பகுதிச் செலவு

கல்விப்பகுதியின் கீழுள்ள பரீட்சைப் பகுதிக்கு உபமான்யமாக 2,53,080 ரூபாகேட்டுக் கல்விமந்திரி பிரேரணை ஒன்றைச் சென்றவெள்ளிக்கிழமை சனப்பிரதிநிதிகள் சபையிலே சமர்ப்பித்திருக்கின்ருர். பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் மாணவிகளின் தொகை அதிகரித்தமையே இந்த மேலதிகசெலவு ஏற்படக்காரணமாம். உதாரணமாக, 1960-ம்ஆண்டின் மார்கழியிலே சாதாரண ஜி. சி. ஈ. பரீட்சைக்கு 1,20,302பேர் தோற்றிய விடத்திலே நிகழும்1961-ம்ஆண்டின் ஆவணியில் நடந்தேறிய அதேபரீட்சைக்கு 1,54,104பேர் தோற்றியிருக்கிருர்கள்.

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு

பண்டாரநாயக்கா கொலைவழக்கிலே முதலாவதுஎதிரியான மாபிட்டிகமை புத்தரக்கித்ததேரோ தனக்குவிதிக்கப்பட்டுள்ள மாணதண்டனையை ஆட்சேபித்துச் செய்துள்ள அப்பீல்வழக்கு வருகிறஐப்பசிமாதம் 31-ந்திகதியன்று மூன்றுநீதியரசர்களின் முன்னிலையிலே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இவ்விசாரணையைப்பார்க்கப் பொதுமக்களுக்கு விசேஷவசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

## எம். பி.கள் அனுப்பிய தந்திகள்

பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஓரளவுகட்டுப்பாட்டுடன் இலவசமாகத் தந்திகள்அனுப்புதற்கான சலுகை வழங்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்தச் சலுகைக் கட்டுப்பாட்டைக் கடந்து அவர்கள் 4,406தந்திகள் அனுப்பியிருப்பதாய்ப் போஸ்ற்மாஸ்றர்-ஜெனறல் தெரிவித்திருக்கின்ருர். இந்தத் தந்திகளை ஆராய்ந்து அவற்றில்எவைகள் சலுகைக்குள் அடங்கும், எவைகள் அடங்கமாட்டா; சலுகைக்குள்அடங்காத தந்திகளின் கட்டணத்தை அங்கத்தவர்களின் கணக்கிலிருந்து எவ்விதம் அறவிடவேண்டும் என்பனபற்றிய விபரங்களை அறிய ஒருகமிற்றி நியமிக்கப்படும்போல் இருக்கிறது.

## ஆபாசபுத்தக தடைச்சட்டம்

சன்மார்க்க கெடுதிக்கேதுவான ஆபாசபுத்தகங்கள், பத்திரிகைகளைத் விலக்குவதற்கும், பிரசுரஞ்செய்வதைத் தடுப்பதற்குமான பிரமாணங்களை அடக்கிய உத்தேசசட்டம்ஒன்றைக் கலாசாரப்பகுதி தயாரித்துக் கலாசாரமந்திரிகாரியாலயத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறது. மேலும்இதுவிஷயமாய்க் கலந்துவிவாதிப்பதற்கெனப் பொலிஸ், கல்வி, கலாசாரப் பகுதிகளைச்சேர்ந்த உயர்தரஅதிகாரிகளின் மகாநாடுஒன்றைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன.

## பிரசாவுரிமைபெற்றவர்கள்

சென்றவருடம் மார்கழி 8-ந்திகதி முதல் சென்றஆவணி 1-ந்திகதி வரையிலுள்ள எட்டுமாதங்களிலும் சுமார் 1,255வெளிநாட்டவர்கள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப் பட்டிருக்கிருர்கள். இவர்களிலே பெரும் பகுதியினர் தோட்டப்பகுதிகளிலுள்ள தமிழ்த்தொழிலாளர்களே. 1949-ம் ஆண்டின் இந்திய-பாகிஸ்தானிய பிரசாவுரிமைசட்டத்தின்படியே இலங்கைப்பிரசைகளாக இவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

## ஐஞ்ஞூறு முஸ்லீம் ஆசிரியர்கள்

அரசினர்பாடசாலைகளிலும், வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலும் சமயங்களும் படிப்பிக்கப்பட வேண்டுமென்று கல்விமந்திரி செய்துள்ள முடிவின்விளைவாக அப்பாடசாலைகளிலே கல்விப்பகுதி ஐஞ்ஞூறு முஸ்லீம்ஆசிரியர்களைப் புதிதாக நியமனஞ்செய்யவிருக்கிறது. அப்பாடசாலைகளிலே கிறிஸ்தவ, புத்த, இந்து சமயங்களைப் படிப்பிப்பதற்குப் போதியஆசிரியர்கள் இருப்பதாகக் கல்விப்பகுதிசமீபத்திலே கண்டறிந்திருக்கிறது. ஜி. சி. ஈ. பரீட்சைக்குச் சமயபாடம் ஒருகட்டாயபாடமாக விதிக்கப்பட்டிருப்பதாலே ஐஞ்ஞூறு முஸ்லீம்ஆசிரியர்கள் (மௌலவிகள்) உடனடியாக நியமனஞ்செய்யப்படவிருக்கிருர்கள்.

## மாக்ஸியவாதிகளுக்குச்சூடு

நல்லூர்விழாவைமுன்னிட்டு யாழ் நகரமேயர் திரு. ரி. எஸ். துரைராசா அவர்கள் விடுத்தஅறிக்கைஒன்றிலே, "இலங்கையில் மாக்ஸீயவாதிகள்சிலர் சமயத்தில் அக்கறைகாட்டுவது விசித்திரமாகவும், விந்தையாகவும் இருக்கின்றது; "மதம் மக்களைமயக்கும் அபின்" என்ற மாக்ஸீயவாதிகளின் நிலைமை மாறிவிட்டதுபோலிருக்கிறது" எனக் குறிப்பிடலாயினர்.

## எம். பி. களும் அபிவிருத்திவரியும்

பாராளுமன்ற அங்கத்தவர்கள் தேசியஅபிவிருத்திவரி செலுத்த வேண்டியவர்களா? இல்லை. ஆனால், மந்திரிகளும், பாராளுமன்றக் காரியதரிசிகளும் இந்தவரியைச் செலுத்த வேண்டும். பாராளுமன்ற அங்கத்தவர்கள் வாங்கும்வேதனம் சம்பளமல்ல, வெறும்அலவன்ஸே. இவர்களின்அலவன்ஸுக்கு வருமானவரி அறவிடப்படுவதில்லை. பயணச்செலவுஉட்பட மாதவீதம் இவர்களுக்கு 750ரூபா அலவன்ஸ் வழங்கப்படுகிறது. சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களுக்கும் தேசிய அபிவிருத்திவரி இல்லை.

## ஆசிரியர்களின் இடமாற்றம்

இடமாற்றவேண்டி இம்மாதமுடிவினுள் மனுப்பண்ணிக்கொள்ளாத ஆசிரியர்கள் பிறகு1963-ம் ஆண்டு தைமாதம்வரை இடமாற்றம் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில், ஆசிரியர்களின் இடமாற்றம்பற்றிய புதியதிட்டம் ஒன்றைக் கல்விமந்திரி காரியாலயம் இப்போது வகுத்திருக்கிறது. அதன்படி ஒவ்வொருவருடத்தினதும் ஆரம்பத்திலேயே ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள். தற்போது கல்விப்பகுதி இடமாற்றம் பற்றிய 880 மனுக்களை நிறைவேற்றி வைப்பதில் வேண்டிஒழுங்குகளைச் செய்திருக்கின்றது. இந்தமாற்றங்களிலே 30வயதுக்குக்கீழ்ப்பட்ட கலியாணமாகாத ஆசிரியைகளுக்கு முதலிடம்கொடுத்திருக்கிறது. மிகத் தூரமான இடங்களாலே பிரிக்கப்பட்டுப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியதம்பதிகள் ஒரேபாடசாலையில் கடமையாற்ற அனுமதிக்கப்படவிருக்கிருர்கள். வைத்திய நற்சாட்சிப்பத்திரங்கள் திருப்தியளிக்குமிடத்து அதனைச்சமர்ப்பித்த ஆசிரியர்களும் இடமாற்றத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

## புதியடக்றர்மாரின்கதி

சென்றமாதம் தங்கள்கடைசிப்பரீட்சையில் அரங்கேறிய 48புதியடக்றர்மாரும் அரசாங்கசேவையிலே குறைந்தபட்சம் ஐந்துவருடகாலம் வைத்தியகடமையாற்றுவதற்கு உடன்பட்டுப் பிணைப்பத்திரமொன்றிலே கைச்சாத்திடுவதற்குச் சம்மதியாதிருந்தால் அல்லது குறித்தகால எல்லைக்குமுன் அரசாங்கசேவையிலிருந்து விலகுமிடத்துப் பதினுயிரம் ரூபாகொடுக்க இணங்காதிருந்தால் தங்கள்கதி என்னவாகுமோவென்று இப்போது சிந்தித்துவருகிருர்கள். இவர்கள் இம்மாதம்15-ந்திகதிக்கு முன் வைத்தியநியமனங்கள்பற்றி அறிவிக்கப்படுவார்களெனத் தெரியவருகிறது. ஏற்கனவே அரசினர்ஆஸ்பத்திரிகளில் நியமனஞ்செய்யப்பெற்ற டக்றர்மார் ஐந்துவருடப்பிணைப்பத்திரத்தில் இன்னுமே கைச்சாத்திடவில்லை. அரசாங்கவைத்தியஅதிகாரிகள் சங்கபிரதிநிதிகளுக்கும், சுகாதார சேவைகளின் பிரதிநிதிகளுக்குமிடையே இதுவிஷயமாய் நடைபெறவிருக்கும் மகாநாடுசெய்யும் தீர்மானத்தைக் காத்திருக்குமாறு சங்கம்அவர்களைக் கேட்டிருக்கின்றது.

## பாடசாலைசெல்லாத பிள்ளைகள்

இலங்கையிலே இப்போது முப்பது இலட்சம் பிள்ளைகளுக்குமேல் இருக்கின்ருர்கள். இவர்களில் நான்குஇலட்சம் பிள்ளைகளுக்குமேல் பாடசாலை சென்று படிக்கவேண்டிய வயதுடையவர்களாயிருந்தும் பாடசாலைக்குச் செல்வதில்லையென்று பிள்ளைகள் பராமரிப்புக் கமிஷனர் தமதுஅறிக்கையிலே தெரிவித்திருக்கிருர். சுமார் ஆருயிரம்பிள்ளைகள் அனுதைகள்விடுதிகளிலும், பிள்ளைகள்பராமரிப்பு நிலையங்களிலும் இருந்துவருகிருர்கள்.

## டக்றமாரின் இடமாற்றம்

சாவகச்சேரி டி. எம். ஒ. டக்றர் எஸ். துரைராசா மாத்தறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருக்கிருர். இவரிடமாக அப்புத்தளை டி.எம்.ஒ. டக்றர் ரி.ஆர். அருளம்பலம்அவர்கள் இம்மாதமுதல் சாவகச்சேரி டி. எம். ஒ. ஆக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்.

## ஒரேநாளில் குடிசனக் கணக்கு

அடுத்தகுடிசனக்கணக்கு எடுப்பதை ஒரேநாளில் நடத்திமுடிக்குமாறு கைத்தொழில்-கலாசாரமந்திரி தேர்தல்கமிஷனரைக் கேட்டிருக்கின்ருர். அன்றுதினம் இருபதினுயிரம் பணியாளர் நாடுமுழுவதிலும் ஏககாலத்திலே குடிசனக்கணக்கு எடுக்கவிருக்கின்றனர். இதற்கானஏற்பாடுகளை உடனேதானேசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

## புதிய எஞ்ஜினியர்கள்

இலங்கைச்சர்வகலாசாலை சென்ற ஆனிமாதம்நடத்திய எஞ்ஜினியறிங் ஈறுந்தபரீட்சையிலே புதியஎஞ்ஜினியர்களாக 46பேர் அரங்கேறியிருக்கின்றனர். இவர்களில் பதினொருவரை தமிழர்கள்.

## புத்தசங்கமும் அரசியலும்

வித்தியாலங்கார சர்வகலாசாலைப் புத்தகலைப் பேராசிரியரான கனம். சிவாலிதேரோஎனும்புத்தகுரு சென்ற 6-ந்திகதியன்று களனியிலே பாடசாலைப் பரிசளிப்புவிழாஒன்றில் பேசியபோது: சென்றஇருபொதுத்தேர்தல்களிலும் புத்தசங்கம் அரசியலில் கலந்துகொள்ளவில்லை; ஆனால், நாடு ஆபத்தானபாதையைநோக்கிச் செல்வதால் மீளவும்நாம் அரசியலில் குதிக்கப்போகிருேமெனக் கூறலாயினர்.

## எம். பி. பதவியை இழந்தார்

வெலிமடைப்பிரதிநிதி கே. எம். பி. இராஜரத்தினவுக்கு விதிக்கப்பட்டிருந்த பதினெட்டுமாதக் கடுமூழிய சிறைத்தண்டனையைக் கவர்னர்-ஜெனறல் இரண்டுமாதமாகக் குறைத்துவிட்டபோதிலும் அவர் தனது எம். பி. பதவியை இழந்துவிட்டார். அரசியல்சட்டப்படி பன்னிருமாதங்களுக்குமேல் தண்டிக்கப்படும்குற்றத்திற்காக எம். பி. சிறைசெல்லஆரம்பிக்கும்போது அவர் தனது பதவியைஇழக்கின்ருர். அதனுல் வெலிமடைத் தொகுதிஸ்தானம் காலியாகிவிட்டது. அத்தொகுதி உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை அபேட்சகர்கள் சமர்ப்பிக்கவேண்டிய திகதி குறிக்கப்படவிருக்கிறது. அதுகுறிக்கப்பட்டதும் 'கெசற்'றில் வெளியிடப்படும்.

## கல்விப்பகுதிச் சஞ்சிகை

அரசாங்கஅச்சகத்திலே அறவிடப்படும் அச்சுச்செலவானது தனிப்பட்ட அச்சகங்கள் அறவிடுவதைக்காட்டிலும் மூன்றுமடங்கு அதிகமென்று கல்விப்பகுதிஅதிபர் திரு. எஸ். எப். டி சில்வா தெரிவித்து, கல்விப்பகுதிச் சஞ்சிகை அரசாங்கஅச்சகத்திலே அச்சிடப்படும்வரை அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு அதன்அச்சுச்செலவை எக்காலத்திலும் சமாளிக்கமுடியாதெனக் கூறுகின்ருர்.

## 'கசிப்பு' மரணங்கள்

களவிலேதயாரிக்கப்படும் 'கசிப்பு'ச் சாராயத்தைக் குடித்தகாரணமாகக் கடந்தஎட்டுமாதங்களிலும் சுமார் நூறு அறியப்பட்ட மரணங்கள் நேர்ந்திருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் விசாரணைமூலம் கண்டறிந்திருக்கிருர்கள். ஆனால், 'கசிப்பு' மரணங்கள் எல்லாம் அரசினர்ஆஸ்பத்திரிகளில் நோமையால் உண்மையான மரணங்களின்தொகையைச் சரிவரக்கண்டறிய முடியாதிருப்பதாய்ச் சுகாதாரப்பகுதி அறிவித்திருக்கிறது.

## சிமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன் சிமெந்துத்தொழிற்சாலையின் தூசித்தொல்லையை ஒழிக்கும்நடவடிக்கையாகப் பத்துஇலட்சம் ரூபாசெலவிலே ஓர்இயந்திரத்தைப் பிறநாடுஒன்றில் வாங்குவதற்குச் சிமெந்துக் கூட்டுறவுஸ்தாபனம் தற்போது ஒப்பந்தஞ் செய்திருக்கிறது. இச்சிமெந்துத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டபின் கடந்தபத்துவருடங்களிலும் அதன் சுற்றுடலிலுள்ள காசநோய் ஆஸ்பத்திரி நோயாளரும், வெற்றிலைச் செய்கையாளரும் சிமெந்துத்தூசியினுல் வெகுவாகப்பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆயினும், புதிய இயந்திரம் 1963-ம்ஆண்டுதான் வேலைசெய்ய ஆரம்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### புரட்டாசி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | ஞா. | 2 | **பெந்தெக்கோஸ்தின்பின் 17-ம் ஞாயிறு** (வி. ம.) | ப. |
| 18 | தி. | | அர்ச். குப்பேர்த்தினோ சூசையப்பர் | வெ. |
| 19 | செ. | | அர்ச். யனுவாரியாரும், தோழரும் | சி. |
| 20 | பு. | | சதுர்காலப் புதன் (அர்ச். ஏயுஸ்தாக்கியார் தோழர் ஞா) | ஊ. |
| 21 | வி. | 2 | **அர்ச். மத்தேயு** (வி. ம.) (திரிகோணமலை மேற்றிராணியாருக்காகச் செபம்) | சி. |
| 22 | வெ. | | சதுர்கால வெள்ளி (அர்ச் வில்லானோவா தோமையார் ஞா) | ஊ. |
| 23 | ச. | | சதுர்காலச் சனி (அர்ச். லீனப்பர் ஞா.) | ஊ. |

சத்திய வேத
பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 16-ந் திகதி

## சமாதான தூதுகள்

பெல்கிறேட்நகரில்கூடிய இருபத்தைந்து நடுநிலைமைநாடுகளின் மகாநாடு ஐந்து தினங்களாகநடைபெற்றுவந்து முடிவடைந்துவிட்டது. உலகம் யுத்தபேராபத்து ஒன்றில் ஊசலாடிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே — உலகத்தை யுத்தகார்மேகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கும் இத்தருணத்திலே உலக சமாதானத்துக்கு அடிகோலுவதும், அதனைநிலைநாட்டுவதுமான அரும்பணியிலே இந்தநடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் ஈடுபடமுனைந்தமை வரவேற்கத்தக்கதே. உலகின் இருபெருந்தலைவர்களும் சந்தித்துப் பேசி உலகசமாதானத்தை நிலைநாட்டவேண்டுமென்று மகாநாடு செய்த வேண்டுகோளை எடுத்துக்கொண்டு இந்தியபிரதமர்நேருவும், கானநாட்டின் ஜனாதிபதி நிக்குருமாவும் ருஷியபிரதமர் குருஷேவிடம் தூதாகச்சென்றார்கள். அதே போன்று இந்தோனேஷியா ஜனாதிபதி சுகர்னோவும், மாலிநாட்டின் ஜனாதிபதி கெயித்தாவும், அமெரிக்க ஜனாதிபதி கென்னடியிடம் தூதாகச்சென்றுள்ளார்கள். இவர்களின் வேண்டுகோளைக் குருஷேவோ, கென்னடியோ வரவேற்பார்களா? அன்றேல் பலதையும்சொல்லிச் சமாளித்துவிடப் பார்ப்பார்களா? என்பதுதான் இன்றெழுந்துள்ள பிரச்சினையாகும்.

தன்னிடம் தூதாகவந்த இருபிரமுகர்களுக்கும் பதிலளித்தபோதும், அவர்களுடன்நடத்திய சம்பாஷணையின்போதும் ருஷியபிரதமர் குருஷேவ் கூறியவற்றிலிருந்து அவரின்நிலைமையில் எவ்விதமாற்றமும் இல்லையென்பதே அவதானிகளின்கருத்தாகும். "யுத்தவிளிம்பில் உலகம் தத்தளிக்கின்றது; பயங்கர நாசம்விளைக்கும் ஒருயுத்தத்திலே உலகத்தை ஈடுபடுத்திவிடுமாறு ஆக்கிரமிப்புச் சக்திகள் எத்தனிக்கின்றன; ஜேர்மன்பிரச்சினையை ஓர்ஏதுவாக எடுத்துக்காட்டி யுத்தமுயற்சிசெய்கின்றன" என்று ஆக்கிரமிப்பு இன்னதென்றேஅறியவராத குருஷேவ்கூறினார். "உலக மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; சகலமக்களும், சகலஅரசாங்கங்களும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டால்தான் சுதந்திரத்தை உருவாக்கமுடியும்; சமாதானத்தை விரும்புவதால்மட்டும் யுத்தத்தைத் தடுத்துவிடமுடியாது; சோவியற் மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை; சோவியற்அரசு முதலில்ஆயுதங்களை உபயோகிக்கமாட்டாது; யுத்தபாதையில் செல்லமாட்டாது" என்று ஒருயுத்தத்திற்கான சூழ்நிலையை இன்று உருவாக்கிவிட்டுள்ள குருஷேவ்கூறுகின்றார். மூன்றாவது உலகயுத்தம்மூளாது சோவியற் அரசு தன்னாலியன்றதெல்லாம் செய்துவருகின்றது; ஆனால்,ஏகாதிபத்தியவாதிகள் ஒருயுத்தத்தை ஆரம்பித்தால் அவர்களின்முடிவுகாலம் அதுவேயாகும்; அப்படியான ஒருயுத்தம்மூண்டால் தமது நாட்டுக்குப் பெரும்அபாயத்தை அது உண்டுபண்ணுமென்பதைச் சோவியற்தலைவர்கள் அறிவார்கள்; ஆனால், பெருந்தேசப்பரப்பைக் கொண்டுள்ளகாரணமாக எமது நாடு யுத்தத்திலிருந்து தப்பிப் பிழைக்கும்; ஆனால், இந்த அணுயுத்தப்போரில் மேற்குஜேர்மனிக்கு, பிரான்ஸுக்கு, அன்றேல்பிரித்தானிக்கு என்னநேரும்? கடந்தயுத்தத்தில் சோவியற்அரசு வெற்றியீட்டியதுபோலவே இன்னொருயுத்தம் வந்தாலும் அதிலும்வெற்றியீட்டும்" என்று குருஷேவ்முழங்கியிருக்கின்றார்.

இரண்டாவது உலகயுத்தத்தின் முன் ஹிற்லர் மேற்குவல்லரசுநாடுகளைப்பார்த்து எவ்விதம்முழங்கினரோ, அவைகளையெல்லாம் ஒருகைபார்ப்பதாக எவ்விதம் கர்ச்சித்தாரோ அவ்விதமேஇன்று குருஷேவும் அவருடையகோலம்பூண்டு கர்ச்சனைசெய்கின்றார். அவரது இந்தமுழக்கங்களும்; கர்ச்சனைகளும் பேர்ளின்பிரச்சினையைத் தனக்குச் சாதகமாகத் தீர்த்துக்கொள்ளத்தான். ஆனால், இந்தப்பிரச்சினையை மிரட்டலென்ற இராசதந்திரத்தினால் வெற்றிகரமாகத் தீர்க்கமுடியுமென்று அவர் நம்புகின்றாரா? பிரமாண்டமான அணுக்குண்டுகளை வெடிக்கவைத்துப் பரீட்சிப்பதினால் மேற்குவல்லரசுநாடுகளை விரட்டியடித்துத் தனதுவழிக்குத் தலைவணங்கிக்கொண்டு வரப்பண்ணிவிடலாமென்று அவர்கருதுகின்றாரா? அவைகள் பலமற்றிருப்பின் அவரின் இந்தமிரட்டல்களுக்கெல்லாம் பயந்துபின்வாங்கி அடிபணியவேண்டுமே. சரணாகதி அடையவேண்டுமே. ஆனால், அவைகள் அடிபணியவுமில்லை. சரணாகதி அடையவுமில்லை.

சோவியற்ருஷியாவின் அணுஆயுதப்பரீட்சைகள் மேற்கத்தியநாடுகளை மிரட்டிப் பேர்ளின்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுவதற்குப் பதில் பேர்ளின் நெருக்கடியை மேலும் மோசமாக்க உதவியிருக்கிறது. மீளவும் உலகயுத்தம்ஒன்று ஏற்படுமோவென்று அஞ்சவேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கிறது. தற்போது ஜேர்மன்எல்லைகளின் இருமருங்கும் அணு ஆயுதங்கள் தாங்கியபடைகள் ஒன்றையொன்று எதிர்நோக்கியபடியே நிற்கின்றன. ஒருசிறியதவறு நேர்ந்தாலும் ஓர் உலகயுத்தம் மூளக்கூடியஅபாயநிலை உருவாகியுள்ளது. அணுயுத்தம் ஒன்று மூண்டுகொள்ளுமானால் இருவல்லரசுகளினதும் நாடுகளுக்கு மாத்திரமல்ல, ஆனால், நடுநிலைமை நாடுகளுக்குமே பேராபத்தும், பேரழிவும்ஏற்பட்டேதீரும். ருஷியா ஒன்றிலுமொன்றுபெரிதாக இதுவரை ஏழுவித அணுக்குண்டுகளைப் பரீட்சித்திருக்கின்றது. அதைக் கண்டு அமெரிக்காவும் அப்பரீட்சைகளை ஆரம்பி[illegible] விட்டது. பிரித்தானி, அமெரிக்கா, பிரான்ஸ், மேற்குஜேர்மனி ஆகிய நான்கும்தங்கள்படைகளைப் பலப்படுத்துவதற்கான தீவிரஆயத்தங்கள் செய்துவருகின்றன. முன்னொருபோதும் இல்லாதஅளவிலே சர்வதேச நெருக்கடிநிலைமை இன்று அதிகரித்திருக்கிறது. "மிகவும்கஷ்டமான—அபாயகரமான உலகநிலை உருவாகிவருகின்றது; ஆயினும் சமாதானம் பாதுகாக்கப்படும்; யுத்தம்என்பது ஏற்படாதென நம்புகிறேன்" என்று குருஷேவிடம் தூதாகச்சென்றுதிரும்பிய இந்தியபிரதமர் நேருஅவர்கள் தெரிவித்துள்ள அபிப்பிராயமும் ஆராயத்தக்கதே.

# இருளில் ஒளி
**— 20 —**

[எமது தெய்வத் திருச்சபை நாளும் பொழுதும் கத்தோலிக்கரல்லாதாரைக் கவர்ந்து உலகப் பொதுமறை ஆகிவரும் வரலாற்றுக்கதை இது.]

### அதிகாரியின் மனமாற்றம்

**கென்றி பான்ச் எழுதுவது:**

எனது துணைவியுடன் விடுமுறையைக் கழிக்கச் சென். லூயிஸ் மாகாணத்துக்குச் சென்றுகொண்டிருந்தேன். மாகாண எல்லையைத் தாண்டியபின் சிலபொருட்களைக் கொள்வனவு செய்தற்காகப் பாதையோரத்தில் மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டுச் சென்றோம். திரும்பியபோது மோட்டாரண்டை பொலிஸ் அதிகாரியொருவர் நின்றுகொண்டிருந்தார்.

"உங்கள் அனுமதிப்பத்திரம் எங்கே?" என்று வினவிய அந்த அதிகாரி, 'இதென்ன சுலோகம்' என வண்டியின் முகப்புக் கண்ணாடியில் தொங்கிய அட்டைத்துண்டைச் சுட்டிக்காட்டினார். எங்கள் பிரயாணம் தொடங்கும்போது எனது சிறிய மருமகள் அதை முகப்புக் கண்ணாடியில் ஒட்டியது எனது ஞாபகத்துக்கு வந்தது. அவ் அட்டையில்,

**மரியாயின் மாசில்லாத இருதயம் துதிக்கப்படுவதாக. இதை நீ தினமும் உச்சரிப்பதுடன் உனது நண்பர்களையும் அவ்வாறு செய்யுமாறு கூறு என அச்சிடப்பட்டிருந்தது.**

எனது துணைவி பொலிஸ் அதிகாரிக்குப் பத்திமாநாயகியின் காட்சிகளையும், உலகசமாதானம், ருஷிய மனந்திரும்புதல் என்பவற்றுக்காக மரியாயின் மாசில்லா இருதயப் பக்தியை அதிகரிக்க வேண்டுமென்பதையும் சுருக்கமாக விளக்கினாள். இச்சம்பவங்களை இதற்கு முன்னர் அறிந்ததேயில்லை என அதிசயித்தார் பொலிஸ்காரர். "நீங்கள் இம்மாகாணத்திலுள்ள கத்தோலிக்க குரவரிடம் சென்றால் அதிக விளக்கங்களைப் பெறக்கூடும்" என என்துணைவி தெரிவித்தாள்.

"நல்லது. இங்கு யாத்திரிகர்கட்கென விசேட விதிகள் கிடையாது. இம்முறை எப்படியாவது போகட்டும். அடுத்ததடவை அனுமதிப்பத்திரமின்றி இங்குவரக்கூடாது" என எச்சரித்த அந்த அதிகாரி, எனது லைசன்ஸ் பத்திரத்தைவாங்கி எதையோ குறித்துக்கொண்டபின் எங்களை அனுப்பிவைத்தார்.

சில மாதங்கள் கழிந்தன. அப்பொலிஸ்காரரிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது.

"அனுமதிச்சீட்டில்லாத காரணத்தால் உங்களைத் திருப்பியனுப்ப வேண்டிய என்னை உங்கள் சுலோக அட்டை மனமாறச் செய்துவிட்டது. வேதஉபதேசம் கற்றுவரும் யான் அடுத்துவரும் மரியாயின் மாசற்ற இருதயத்திருநாளன்று ஞானமுழுக்குப் பெறுவேன். நீங்களிருவரும் எனது ஞானப்பெற்றாராக அவ்வைபவத்தில் கலந்துகொள்ள வேண்டுமென அன்புரிமையுடன் அழைக்கின்றேன். வரும்போது அச்சுலோகஅட்டைகளில் போதியளவு கொண்டுவாருங்கள்" என அக்கடிதம் கூறியது.

— சா. பெ.

வெளிவந்திருக்கின்றன! விற்பனையாகின்றன!!

## ஞானோபதேசப் பாட நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| பாலர் குறிப்பிடம் | (2-ம், 3-ம் வகுப்புக்குரியது) | | 1-00 |
| சின்னக் குறிப்பிடம் | (1-ம் பாகம்) | 4-ம் வகுப்பு | 80 |
| ,, ,, | (2-ம் பாகம்) | 5-ம் வகுப்பு | 80 |
| பெரிய குறிப்பிடம் | (1-ம் பாகம்) | 6-ம் வகுப்பு | 75 |
| ,, ,, | (2-ம் பாகம்) | 7-ம் வகுப்பு | 75 |
| ,, ,, | (3-ம் பாகம்) | 8-ம் வகுப்பு | 75 |

மனேஜர்:
**அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,**
**யாழ்ப்பாணம்.**

### திருச்சபைச் சங்கத்தில் பிறசமயத்தவர்கள்

நடந்தேறவிருக்கும் வத்திக்கான் சங்கத்தின் குருமாணவர் கல்விபற்றிய குழுவில் உறுப்பினராய் இருப்பவரான பாலாய் (இந்தியா) மேற்றிராணியார் வயலில் ஆண்டகை, கத்தோலிக்கு அல்லாத கிறிஸ்துவசபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இரண்டாவது வத்திக்கான் சங்கத்தில் கலந்து கொள்வர் எனக் கூற இடமிருக்கிறது என்றார். தற்கால நிலைமைக்கு ஏற்றவாறு திருச்சபையின் நிர்வாக ஒழுங்குகளால் மாற்றங்களை இச்சங்கம் ஏற்படுத்தலாம் எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதியற்ற சிறுவரின் பேரதிர்ஷ்டம்

முப்பது வயதினளான ஸ்கொத்திய பெண் ஒருத்தி உத்தியோகமுறையான கூட்டம் ஒன்றிற்குச் சென்றுவிட்டுக் கிளாஸ்கோவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். புகையிரத மேடையில் "மலிவு விற்பனை" விளம்பரம் ஒன்று அவள் கண்ணிற்பட்டது. அவளுக்கு நூல்களில் வெகு பிரியம். அதுவும் குறைந்தவிலையில்என்றால் ஸ்கொத்தியரைக் கேட்கவும்வேண்டுமா? அந்நூலில் இரு பிரதிகள் வாங்கிக்கொண்டாள். நூலைப்படித்துக்கொண்டிருந்ததில் புகைரதவண்டி வந்ததுகூட அவளுக்குப் புலப்படவில்லை. இச்சம்பவம் அவளுடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டது. ஏன்? தொலைவிலிருந்த வேறுபலரின் வாழ்க்கையிலும் அதன் விளைவு பிரதிபலித்தது.

அவள் அன்று வாங்கிய நூல் மொறிஸ் உவெஸ்ற் எழுதிய **"சூரியனின் பிள்ளைகள்."** நேப்பிள்சில் யுத்தத்தின் விளைவால் அந்தரித்த நாதியற்றசிறுவருக்குப் பொறெல்லி சுவாமியார் செய்யும் சேவைபற்றிக் கூறுவது அந்நூல். அது அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. உதவிபுரியவேண்டுமென உறுதிகொண்டாள் மாகிறேற் கிளார்க். இவள் பிறெஸ்பித்தேரியன் மதத்தினள்.

அன்று செல்வி கிளார்க் பயணஞ் செய்திருக்கத் தேவையில்லை; ஏனெனில் அவள்கிளாஸ்கோவில் வசிக்கவோ, தொழிற்சாலையில் வேலைபார்க்கவோ கருதியிருந்தவள் அல்லள். சில ஆண்டுகளுக்குமுன் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்திலிருந்து சமூகவியல் பட்டதாரியாக வெளியேறியபொழுது பொருளாதார ஆய்வுக்குழுவினராக அரசகருமகந்தோரில் ஊழியஞ்செய்யும் நோக்கத்துடன் இலண்டன் சென்றிருந்தாள்.

மோதிரம் மாற்றி, திருமணஞ்செய்யவிருக்கும் சமயம் (இல்லிடம் தயாராயிருந்தது) அவளுடைய தந்தை இறந்தார். ஈமச்சடங்குகளுக்குக் கிளாஸ்கோவுக்கு வந்தவள் அங்கேயே தங்கிவிட்டாள்; ஏனெனில், தந்தையின் தொழிற்சாலை நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அவ்வேலையை ஏற்க மறுத்தால் ஐம்பதுதொழிலாளரின் வாழ்க்கையும், தந்தையின் ஆயுள்கால ஆக்கமும் அழியும். ஏற்றால் தான் விரும்பிய வாழ்க்கையைக் கைநெகிழ்ந்து, புதியதோர் வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டும். தொழிற்சாலையைக் காப்பாற்ற மனங்கொண்டாள். அதனால் தாம்பத்திய வாழ்க்கையைக் கைவிடவேண்டியதாயிற்று.

இயந்திரக்கலை அறியாதவளாகையால் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று ஆறுமாதங்களாகக் கற்றாள். இன்று தொழிற்சாலையில் 130 பேர் வேலைபார்க்கின்றனர். செல்வி கிளார்க் அரசாங்கத்திடமும், வங்கியிலுமிருந்து 87,000 பவுண் கடன்பெற்று, தொழிற்சாலையைப் பெருப்பித்து நிறைவான தொழில்நடத்த உத்தேசித்திருக்கிறாள். இத்துடன் கிளைத்தாபனமொன்றும் நடத்திவருகின்றாள்.

இதிலடங்கிய வேலைகள் யாவும் பார்த்து நிர்வாகஞ் செய்வதற்கு ஒரு பெண்ணிற்குப் போதிய முயற்சிஉண்டு. ஆனால், கடந்த ஓராண்டாக, மாலையில் தொழிற்சாலை அலுவல்களை முடித்துவிட்டு, வேறு குறிப்புப்புத்தகங்கள், கடிதங்களைக் கொண்டுவந்து இரவில் கடைச்சாமவேளை மட்டும் தொடர்ந்து வேலைசெய்துகொண்டு வருகிறாள், வண. பொறெல்லி சுவாமியின் தொண்டிற்காக.

மொறிஸ் உவெஸ்ற்றுடைய நூலைப் படித்தபின் தனது அனுதாபத்தைச் செயலிற்காட்ட விரும்பினாள். நாதியற்ற அந்தப் பிள்ளைகளைத் தன் தொழிற்சாலையில் வேலைக்கமர்த்த எண்ணினாள். முகவரி அறிவதற்காக, இத்தாலிய ஸ்தானிகர்காரியாலயத்திற்குச் சென்றாள். அவளது கடிதத்தை மொழிபெயர்த்தனுப்பினர் அலுவலகத்தார். சுவாமியாரின் தொண்டிற்குத் தான் உதவி புரிவதாக வாக்களித்தாள். பின் ஒருநாள் நேப்பிள்சுக்குச் சென்று பொறெல்லி சுவாமியாரைச் சந்தித்து, அவருடைய தொண்டில் ஆரம்பத்திலேற்பட்ட கஷ்டங்கள் பற்றி, கேட்டறிந்துகொண்டாள்.

தொழிலாளர் விசாரணைக்குருவாக ஊழியம்புரியப் பொதுவுடைமையாரிடமும், பிறரிடமுமிருந்து எவ்வளவு எதிர்ப்பு வந்ததென்றும், பாவைக்கூத்துக்காட்டித் தெருத்திண்ணைகளிலிருந்த சிறுவர்களுக்கு வேதம்படிப்பித்ததையும், வீதி சுற்றித்திரியும் பிள்ளைகளைப் பராமரிக்கச் சுவாமியவர்கள் தாமுமவர்களுடன் திரிந்ததையும் அறியவந்தாள். சுவாமியார் தமது தொண்டிற்காக நான்குமொழி கற்றிருப்பதையும், நித்திரைக்குரிய நேரத்தில் மத்தியகால சங்கீதங்கற்பதையும் அறிந்துகொண்டாள்.

செல்வி கிளார்க் அங்கு சென்ற நேரத்திலிருந்து சிறுவனொருவன் அவளுடைய பெட்டிகளைத் தூக்கிச் செல்வதே தனது பணியாக்கிக்கொண்டான். அவனைப்பற்றிச் சுவாமியார் கூறியதகவல் சுவையானது. அவனுக்கு ஆறுவயதாயிருக்கும்போது ஐந்து, ஆறுசிலின் கொண்டுவரும்படி அவனுடைய தாயார் அவனை அனுப்புவாள். காசு இல்லாமல் வீட்டிற்குத் திரும்பக்கூடாது என்பது தாயின் கட்டளை. எனவே, அச்சிறுவன் களவெடுக்கத்தொடங்கினான். களவெடுத்த பொருள்களை விற்றுக் காசாக்கினான். களவெடுக்கமுடியாதபோது தன்னையே விற்றான். தாய் குற்றவாளியா? அவளுக்கு ஏழெட்டுப் பிள்ளைகள்; அத்துடன் தொழிலற்ற கணவன் வீட்டிலே. வறுமையே அச்சிறுவனைத் தீயவழிகளிற் செல்லச் செய்தது.

நாதியற்ற இச்சிறுவரைத் தன் தொழிற்சாலைக்குக் கொண்டுபோகச் செல்வி கிளார்க் கொண்டிருந்த எண்ணத்தைக் கைவிட்டாள். ஏனெனில், அங்கேயே வேலையற்ற சிறுவர்கள் ஏராளம். அரசாங்க உத்தரவும்கிடைப்பது அரிது. உதவிபுரிய வேறுவழி உண்டு. மொறிஸ் உவெஸ்ற் எழுதிய நூல் பிரிட்டனில் ஓர் இயக்கத்தை ஆரம்பித்துவிட்டது. மதபேதமற்ற மக்கள் பலர், கிளார்க் அம்மாள் போன்று, சுவாமியாருக்கு உதவி அளித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் எல்லாரையும் தொடர்புபடுத்தி, சிரமமின்றிச்செலவின்றி ஒன்றுபடுத்த விரும்பி, சென்ற ஆண்டு பொறெல்லி சுவாமியார் இங்கிலாந்தில் தொலைதரிசனி மூலமும், சினிமாமூலமும் பிரசாரஞ்செய்துவிட்டு, தனது 700-க்கு அதிகமான உதவியாளருடன் ஒரு சுற்றறிக்கைமூலம் தொடர்புகொண்டு அவ்வியக்கத்தை நடத்துமாறு கோரினார். அத்துடன் அவ்வியக்கத்திற்கு அவ்வம்மையார் சட்ட அங்கீகாரம் பெற்றுத்தந்ததுடன் பிரமுகர் பலருடைய போதரவையும் தேடித்தந்தாள். அவர்களில் அநேகர் சுவாமியவர்களை நேர்முகமாகச் சந்தித்திருக்கின்றனர். அதற்கும் செல்வி கிளார்க் அச்சாணியாய் உழைத்தாள்.

இப்பொழுது கிளார்க் அம்மாளின் தொழிற்சாலையே முன்கூறிய இயக்கத்தின் தலைமை ஸ்தானமாயிருக்கிறது. பகலில் தொழிற்சாலை அதிபதியாய்ப் பணியாற்றியபின், மாலையில் தருமகர்த்தாவாகத் தொண்டாற்றுகிறாள். அவளுக்கு உதவியாளராய் மரியாயின் மைந்தர் சபையினர் மாலையில் கடிதங்களுக்குப் பதில் எழுதியும், சுற்றறிக்கை தயாரித்தும், புது உறுப்பினரைச் சேர்த்தும், பற்றுவரவு எழுதியும் தொண்டுபுரி[illegible] ஒருவர்மாத்திரம், சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்துத் தட்டச்சில் எழுதும் குருடர் சம்பளம்பெறுகிறார். உதவியாளப் பெண்கள் சென்றபின்னும் செல்வி கிளார்க் அதிகாலை 2, 3 மணிவரை வேலைபார்ப்பாள்.

தற்பொழுது மும்முரமாக வேலையிலீடுபட்டிருக்கிறாள். ஏனெனில், பொறெல்லி சுவாமியார் புரட்டாதியில் வந்து யோர்க்ஷையரிலும், சறேயிலும், சசெக்கிலும், கென்ரிலும், உவறிக்ஷையரிலும், லண்டனிலும் கொடையாளரைத் தேடவிருக்கிறார். நேப்பிள்சுக்கு வெளியே தனது 300 அநாதைகளைக் குடும்பங்களாகப் பிரித்திருத்த எண்ணுகிறார். ஆகவே, செல்வி கிளார்க்குவின் வேலையும் அண்மையில் முடிவுபெறாது.

கிறிஸ்தவ ஒத்துழைப்பை ஆவலாய்த் தேடும் இந்நாட்களில் அதற்கு உத்தம எடுத்துக்காட்டாக விளங்குகிறது செல்வி கிளார்க்கின் தொண்டு. அங்கிளிக்கன் சபையினர், பிறமதத்தினர், திருவூழியரும், இல்லறதுறவறத்தினரும், மதப்பற்றில்லாதாரும் இல்லிடமற்று அந்தரிக்குஞ் சிறுவருக்குத் தொண்டுபுரியும் சுவாமியாருக்கு உதவிசெய்கின்றனர். அக்கொடையாளரின் தலைமையில் திகழ்கின்றாள் பிறெஸ்பித்தேரியன் சபைக்குச் சேர்ந்த செல்வி கிளார்க்.

# கிறிஸ்தசபைகளின் ஒற்றுமைபற்றி

## ஹீனன் அதிமேற்றிராணியாரின் கருத்துக்கள்

லிவர்ப்பூல் அதிமேற்றிராணியார் ஹீனன் ஆண்டகை, "கிறிஸ்துவசபைகளின் ஒற்றுமை"யை விருத்தியாக்க ஏற்படுத்திய மேற்றிராணிமார் குழுவைத் தாம் ஏகமனதாக வரவேற்பதாகப் புரொட்டெஸ்தாந்த அதிகாரிகள் செய்திவிடுத்திருக்கின்றனர். "ரைம்ஸ்" நிருபருக்குப் பேட்டியளித்து, கிறிஸ்துவர்களிடையில் பரஸ்பர நல்லெண்ண மனப்பான்மை கணிசமான முன்னேற்றம் பெற்றிருக்கிறதெனக் கூறினர்.

### மதஅபேதவாதம் ஆபத்தானது

எந்தக்கிறிஸ்துவ சபையிலிருந்தாலும் சரிதான் என்ற மதபிசுபிசுப்பு ஆபத்து நிறைந்தது என்றார். கிறிஸ்துவர்கட்கிடையில் அன்பும், கனிவும் இருந்துவிட்டால் போதக வித்தியாசங்கள் மறைந்துவிடும் என்பதற்கில்லை. ஆகவேதான் எமது வேலையில் வழிகாட்ட மேற்றிராணிமார் குழு இருப்பது நல்லது. மேற்றிராணிமாரின் இந்தக் கொமிற்றி குறித்தகாலங்களில் கூடி, ஒற்றுமை இயக்கம் வளர்ச்சியுறுவதில் ஆவலுள்ளமக்கள், சங்கங்கள், குருமார், போதகர்கள், இல்லறத்தாரையும் கூட்டி, நடவடிக்கைகள்பற்றிய செய்திகள்தரும், கிறிஸ்துவசபைகளின் ஒற்றுமை இயக்கத்தை விருத்திசெய்யும் புதுஎண்ணங்களை வரவேற்று, வெளியிடும்.

### புரொட்டெஸ்தாந்தரின் கருத்து.

கிறிஸ்துவசபைகளுக்கிடையே தொடர்பு உண்டாக்கும் சபையின் அக்கிராசனர், வண. அலிசன் அத்தியட்சகர் இந்நாட்டிலுள்ள கத்தோலிக்க ஞான அதிகாரிகள் ஹீனன் ஆண்டகையின் தலைமையில் ஒரு காரியாலயம் அமைத்திருப்பதை வரவேற்கிறார். இது கிறிஸ்துவர்களுக்கிடையில் பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்த்து, கிறிஸ்துவ ஒற்றுமைக்கு வழிவகுக்கும்என எதிர்பார்க்கிறார்எனச் செய்திவிடுத்தார்.

சுதந்திரசபைகளின் சம்மேளனத்தின்சார்பாக அதன் பொதுக்காரியதரிசி வண. ஒப்றிவீன் கூறினர்; "இங்கிலாந்தில் கிறிஸ்துவசபைகளின் தொடர்புபற்றிய சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. இருதரப்பிலும் உள்ளவர்கள் அதிவிவேகமாகவே நடந்துகொள்வர். எமக்கு வழி நெடியதும், கடினமானதும்என அறிவாளிகள் உணருவர். ஆயினும் யேசுக்கிறிஸ்துவை ஆண்டவரும், இரட்சகருமாக ஒப்புக்கொள்ளும் எவரும், அவரைச் [illegible]ங்கிக்கும் பிறர் உறவுகொள்ளக்காட்டு[illegible] ஆசையைத் [illegible]துவிடமாட்டா[illegible]கள்.

கிறிஸ்துவ ஒற்றுமையை ஊக்குவிக்க 23-ம்அருளப்பர் ரோமையிலும், ஹீனன் அதிமேற்றிராணியார் தலைமையில் இங்கிலாந்திலும் ஒருசெய்தித் தாபனத்தை ஏற்படுத்தியது ஆழ்ந்தகருத்தடங்கிய செயலன்றோ!

கடக்கரிய ஆழியொன்று—சரித்திரத்தாலும், மனப்பதிவாலும் ஆழமாக்கப்பட்ட ஆழியொன்று—உண்டு. "அவர்கள் தங்கள் தப்பறைகளை ஒப்புக்கொள்ளவேண்டும்; நாமும் எமது குறைபாடுகளை ஏற்கவேண்டும்" என அருளப்ப பாப்பு கூறியதைப் புரொட்டெஸ்தாந்தர் மதித்துப் பாராட்டவேண்டியது.' தம்மைப் பிரிக்கும் அம்சங்களைவிட, பொதுவில் கைக்கொள்ளும் விடயங்களில் அதிக கவனஞ் செலுத்துவதால் எல்லாரும் நன்மையடைவர்என ஒருகத்தோலிக்க பத்திரிகை கூறியதும் சிந்திக்கற்பாலது.

கத்தோலிக்கரும், புரொட்டெஸ்தாந்தரும் ஏலலே பொதுசன ஒழுக்கச் சபை, மதுவிலக்குச்சபைபோன்ற இயக்கங்களில் தமது வேற்றுமைகளிருப்பினும், ஒத்துழைக்கின்றனர். வேற்றுமைகள் நீண்டகாலம் இருப்பினும் பலதுறைகளில் இருசாராரும் ஒத்து இயங்க இடமுண்டு. தெய்வாதீனம் விரும்பும் வேளையில் "எல்லாரும் ஒன்றாகவேண்டும்" என்ற எமது ஆண்டவரின்வேண்டுதல் உண்மைபெறலாம்.

### எமது கடமை

இங்கிலாந்துச் சபைப்பத்திரிகை கூறியதாவது: மற்றவர்களைத் துன்புறுத்தாதிருப்பது எமது கிறிஸ்துவ கடமை என்றார் ஹீனன் ஆண்டகை; கத்தோலிக்க போதனையை மாற்றவோ குறைக்கவோ இடமளியாதிருப்பதும் கிறிஸ்துவகடன், என்றும் கூறினர். கிறிஸ்துவ ஒற்றுமையை ஊக்குவிக்கும் ஸ்தாபனத்தை நிறுவியவேளை அவர் கூறியவை சாலச்சிறந்தவை. மனப்பொருத்தமான ஐயந்திரியும் தெளிவற்ற வேற்றுமைகளும் கிறிஸ்தவ சபைக்கு ஒற்றுமையைக் கொண்டுவாராது. அங்கிளிக்கன் சபையினர் தமது நிலைமை யாதுஎனத் தெளிவாயிருக்கவேண்டும்.

### காணமற்போன சுரூபத்தைக் கண்டுபிடித்தனர்

அண்மையில் திருடர்கள் பிரேக் நகரில் ஒரு கார்மேல் மடத்தில் புகுந்து, அம்மடத்துக் கோவிலிலிருந்த குழந்தை யேசுவின் சுரூபத்தைக் கடத்திச் சென்றனர். இச் சுரூபம் 1620ஆம் ஆண்டு முதல் அக்கோவிலில் இருந்துவருகின்றது. காணமல் போன யேசுவைக் கண்டு பிடித்தனர் செக்கோஸ்லோவாக்கிய பொலிஸ் படையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

யப்பட்டிருந்தது. கொழும்பு அதிமேற்றிராணியாரைத் தொடர்ந்து, பெருந்தொகையான குருமாரும் சந்நியாசிமார், கன்னியாஸ்திரிகள், பத்திச்சபை அங்கத்தினர் ஆராதனை செய்தனர். பின்னர், திவ்விய நற்கருணைச் சுற்றுப்பிரகாரம் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகியது. மேன்மை தங்கிய அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள், திவ்விய நற்கருணையை ஏந்திவந்தார்கள். லூர்துகெபிக்குப் பவனிவந்த நற்கருணை ஊர்வலம் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. மாலை 5-10மணிக்கு லூர்துகெபியை நற்கருணையடைந்ததும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட பீடத்திலே வைக்கப்பட்டது.

அதன்பின் திருசேத்திர மைதானத்திலே வைக்கப்பட்டிருந்த நோயாளரை அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் திவ்விய நற்கருணையினால் ஆசீர்வதித்து வலம்வந்த காட்சியானது லூர்து திருப்பதிக்காட்சியை நினைவூட்டியது. திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் முடிந்தது. கடல்போல் பெருகியிருந்த மாதாபக்தர்களை மாதாவின் திருச்சொரூபத்தினால் ஆசீர்வதித்ததும், அன்றைய நிகழ்ச்சிகளை என்றும் மறக்கமுடியாதவர்களாய் மக்கள் சேத்திரத்தை விட்டகன்றனர்.

---

## கடற்கரைத் தெருவில்
# முதல்தேவநற்கருணைத் திருநாள்

நீர்கொழும்பு கடற்கரைத்தெருப் பங்குக் கத்தோலிக்கர் தங்கள் பிள்ளைகளின் முதல்நன்மைத்தினத்தை எவ்வளவோ பணத்தைச் செலவழித்து மிக ஆடம்பரமாய்க் கொண்டாடுவர். அவ்வண்ணம் பணத்தைச் செலவுசெய்து வீண் ஆடம்பரங்களில் மக்கள் ஈடுபடுவதினால் பிள்ளை முதல்தேவநற்கருணை பெறும் தினத்தன்று அக்குடும்பத்துக்குக் கிடைக்கவிருக்கும் விசேஷ ஆசீர்வாதங்களை இழக்கவும், திவ்விய நன்மையின் மாட்சிமையை உணராதிருக்கவும் அவ்வெளி ஆடம்பரங்கள் காரணமாயிருக்குமென்று உணர்ந்த கட்டளைக்குரவர் வண. ஜி. ஜோசவ் சுவாமியார் முதல்நன்மை அளிக்கும் ஓர் புதுமுறையைத் தொடங்கலானார். முதல்நன்மை வாங்கும் பிள்ளையின் பெற்றோர் தினமும் குடும்பசெபமாலை ஓதி முதல் நன்மைக்கு ஆயத்தம்செய்வர். முதல்நன்மை பெறும் தினத்தன்று பெற்றோரும் பிள்ளையுடன் நன்மைவாங்குதல், பிள்ளையைத் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுத்து உத்தரீயம் அளித்தல். முதல்நன்மை ஞாபகமாக வீட்டில் கிறிஸ்துராசாவின் சுரூபஸ்தாபனத்தை நடப்பித்தல், மதுபானம் பாவித்தல்போன்ற அனுவசியமான வெளிஆடம்பரங்கள் யாவும் தவிர்க்கப்படுதல், பிள்ளையின் இருதயத்தில் எழுந்தருளிய யேசுவுக்கு நன்றியறிதலாகப் பின்னேரம்திருமணி ஆராதனைசெய்து சற்பிரசாதநாதரின் விசேஷவரப்பிரசாதங்களை வேண்டுதல் முதலியபத்திமுயற்சிகளைச் செய்து பிள்ளையின் முதல்நன்மைத் தினத்தை யேசுவுக்குகந்ததாகக் கொண்டாடுகின்றனர். சபையார்யாவரும் அப்பேர்ப்பட்ட உன்னதமுறையை அபேட்சிப்பது மனமகிழ்வோடு குறிப்பிடத்தக்கது. மற்றும் கத்தோலிக்க பெற்றோரும் இப்பேர்ப்பட்ட முறையைக்கையாளுவது இனியயேசுவுக்கு மிகவும் உவப்பானதாகும். இப்பேர்ப்பட்ட உன்னதமுறையைத் தொடக்கிய வண. கட்டளைக்குருவானவருக்கு மனமார்ந்த நன்றிஉரித்தாகுக!

—நிருபர்.

---

## போளவலான கத்தோலிக்க ஆசிரியபயிற்சிக் கல்லூரி
# அதிபருக்குப் பிரியாவிடை

"இந்நாட்டின் சிறந்த அறிஞர்களுள் ஒருவரான அதிவண. டி. ஜே. அன்ரனி சுவாமியவர்கள் 1954–1961-ம்ஆண்டு வரை மேற்படி ஆசிரியபயிற்சிக்கலாசாலை அதிபராகக் கடமையாற்றி, பிரிந்துபோகும்போது தமதுபதவியின் அழியாமுத்திரையைப் பதித்துவிட்டிருக்கின்றார்கள்." இவ்வாறு மேற்படி பயிற்சிக்கலாசாலையின் பழையமாணவரான திரு. பி. ஏ. டபிள்யு. நோனிஸ் அவர்கள் அதிபர்அவர்களது ஞாபகசின்னமான சலவைக்கல் ஒன்றைத் திரைநீக்கிவைக்கும்படி நீர்கொழும்பு அர்ச். மரியாயின்கல்லூரி அதிபரான வண. மேர்வின் வீரக்கொடியவர்களைக் கேட்டுக்கொண்டபொழுது மேற்கண்டபடி குறிப்பிட்டார். அந்த வைபவத்தின்பின் கல்லூரிப்பழைய மாணவர் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்துக்கு வண. வீரக்கொடி சுவாமியவர்கள் தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் பேசிய திரு. எம். என். கோஸ்ரா கூறியதாவது:

"பழையமாணவராகிய நாம் இங்கு கூடியிருப்பது எமது அதிபருக்கு எங்கள் மதிப்பையும், நல்எண்ணத்தையும் காட்டும்படி மாத்திரமல்ல, கத்தோலிக்க ஆசிரியரது உயர்இலட்சியங்களையும், தன்மைகளையும், ஆசிரியனது சிறப்பியல்புகளையும் தம்முன்பதித்து உருவாக்கிவிட்ட அந்தமாபெரும் சேவைக்கு உள்ளப்பூர்வமான நன்றியைக்காட்டும்படியும் கூடியுள்ளோம்." செல்வி கெலன்கெட்டி ஆராய்ச்சி அவர்கள், பழையஆசிரியமாணவிகள் சார்பாகப்பேசினார்கள். போளவலானை ஆசிரியபயிற்சிக்கல்லூரி அதிபர் திரு. ஐ. பெலிசியன் பெரேரா, சுவாமியவர்களின் சேவையைப்பற்றிப் பேசுகையில்: "கடந்த 38ஆண்டுகளாக, ஊக்கத்துடனும், திடத்துடனும், வைராக்கியத்திடத்துடனும், இத்தீவின் ஒவ்வொரு ஆசிரியனும் கண்டுபாவிக்கக் கூடிய உன்னதமுறையில் இந்நாட்டுக் கல்வித்துறையில் சேவைசெய்துள்ளார்கள்." என்று குறிப்பிட்டார், பழையமாணவர் சார்பாக, சுவாமியவர்களுக்கு ஒருவெள்ளிக் கேடயம் அன்பளிக்கப்பட்டது.

தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றிகூறும்போது, தமக்கு அன்பளிப்புச்செய்யப்பட்ட கேடயத்தைக் கல்லூரிக்கே உபகரிப்பதாகக்கூறினார். மேலும் அவர், கத்தோலிக்க ஆசிரியர்கள், கிறிஸ்தவ சகோதர மனப்பான்மையும், கிறிஸ்தவ பிறர்சிநேகமும், பிரதிபலன் கருதாத சேவையும், மனப்பான்மையும் உடையவர்களாயிருப்பது அவசியம் என்று கூறினார்.

---

திரு. V. யோசேப் பொன்னையா அவர்கள்
அமரத்துவமடைந்த
2-ம் வருட

## மரணஞாபகம்

மறைவு: 19—9—1959

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழ்மதி 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (19-9-61) காலை 6-15மணிக்கு யாழ்ப்பாணம் ஆசனக் கோவிலிலும், அச்சுவேலி சஞ்சூசையப்பர் கோவிலிலும் துக்கப்பாடற்பூசை நடந்தேறும். அன்றுதினம் அவரது உறவினர், உற்ற நண்பர் அனைவரையும் அவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

அச்சுவேலி

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3317**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர் மேற்கு, காரைநகர்
1. சுப்பிரமணியம் காசிநாதரும்,
2. பெண் இராசம்மாவும்,
3. முருகேசு வேலுப்பிள்ளையும்

— வழக்காளிகள்

எதிராக

கொழும்பு, தற்போது கந்தரோடை
1. சுப்பிரமணியம் சிவசுப்பிரமணியம், கோப்பாய் தெற்கு
2. வனிகசேகரமுத்து குமாரசாமி

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3317-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் வருடம் ஐப்பசிமாதம் 14-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: 12,300/-ம், ரூபா 10,000/-த்துக்கு 7-4-60 தொடக்கம் 12-12-60 வரை 12 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச் செலவு 281 ரூபா 45 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று முதலாம் வட்டாரம் யாழ்ப்பாணம் முனிசிப்பல்சபை 'சீதாரி' பர-நில-இலா-குளி: O பரப்பு பதின் மூன்றும், $\frac{2}{3}\frac{1}{5}\frac{4}{3}$ குளியும் (ப-நி-இ-குளி: O பரப்பு $13\frac{2}{3}\frac{1}{5}\frac{4}{3}$ குளியும், இரு காம்பறுக்கள், சமையலறை, கிணறு, கக்கூஸ், விறுந்தை, முற்றம், மற்றும் கட்டிடங்கள் யாவும் யாழ்ப்பாணம் உவ்றன்ற் வீதி, 27-ம், 29-ம் இலக்கங்களில் அமைக்கப்பட்டவை. இது முற்றிலும் சொரியலாய் அரைப்பங்கு. எல்லை: கிழக்கு—காலஞ்சென்ற சித்தம்பலம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆதனமும், பொதுக் கடைப் பாதையும். வடக்கு — விஸ்வநாதர் தருமலிங்கத்தினுதனம். மேற்கு — உவ்றன்ற் வீதி. தெற்கு — காலஞ்சென்ற சித்தம்பலம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம். இதடங்கலும்.

இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் D. 259/260-ம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1961-ம்ஆ புரட்டாசிமீ 1-ம்உ

**செ. விசாகரத்தினம்,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்
கம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3533**

காரதீவு வடக்கு, காரதீவு
பொன்னம்பலம் நவரட்ணம்

— வழக்காளி

எதிராக

காரதீவு வடக்கு, காரதீவு
கந்தப்பர் சித்தம்பலம்

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3533-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1961-ம் வருடம் ஐப்பசிமாதம் 7-ந் திகதி (7-10-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,442/-ம் இதற்குத் தீர்வை ரூபா 1,000/-க்கு 27-7-60 தொடக்கம் 1-11-60 வரை 100-க்குப் 10 வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு 169 ரூபா 02 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரதீவுக் கோயிற்பற்று வலந்தலை இறை "வல்லி வளவு" பரப்பு நிலஇலாச்சம் 3, குளி 15-ம், பனைகளும், தென்னைகளும், வீடுகளும், வான்பயிர், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—சங்கரப்பிள்ளை பெண் செதுப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — தில்லையம்பலம் கந்தையாவின் பிள்ளைகளுக்குரிய ஆதனம். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—கந்தப்பர் சுப்பிரமணியத்தின் ஆதனம். இதுஅடங்கலும். (இக்காணி மேற்குறித்த வழக்காளிக்கு முதலீடாக ரூபா 2,500/-க்கு 7 வீத வட்டியும் 19-4-52-ல் பிறக்றர் A. கனகசபை முகதாவில் 11914-ம் நம்பர் உறுதியால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

**சி. செ. மாரிமுத்து,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
26-8-61.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2727**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

உரும்பிராய்
வைத்திலிங்கம் கந்தையா

— வழக்காளி

எதிராக

இருபாலை, கந்தையா காசிலிங்கம்

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2727-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமை (17-10-61) முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 10,170 உம், இன்னும் ரூபா 7,500-க்கு 27-2-59 தொடக்கம் 3-9-59 வரையும் 100-க்குப் 10% வட்டியும், பின் கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 314ரூபா 91 சதமும். கொடுபட்ட ரூபா 2,000

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று, இருபாலைஇறை "சீத்தைக் கட்டியும், பொன்னம்பலவளவும்" ப. நி. இ. $8\frac{1}{4}$ உம், கல்வீடுகளும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். இந்தப் பரப்பு எட்டேகாலுக்கும் எல்லை: கிழக்கு — பொன்னையா சரவணமுத்துவிற்கும், பங்காளருக்கும், சின்னத்தம்பி பெண் பறுபதத்திற்கும் உரியஆதனங்கள். வடக்கு—ஒழுங்கை. மேற்கும், தெற்கும் கைஒழுங்கை. இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 11-9-61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பக்கம்

## சத்தியமறைச் சல்லாபம் (5)

### ஓய்வுநாள் அனுசரிப்பு

சுவாந்தர்: சின்னப்பு, ஞாயிற்றுக்கிழமை பார்த்துத்தான் கடும் இறைப்பில் நிற்கிறுய். பூசை கண்டாற் போதமா? ஓய்ந்து இருப்பதும் ஞாயிறு கடன் அல்லவா? சுகபலத்துக்கும் சுகாதாரத்தைச் சார்ந்த இயற்கை விதியல்லவா? ஆதியில் ஆண்டவரே எங்களுக்குச் செய்துகாட்டியிருக்கிறரே! அவருடைய ஏற்பாடு ஞானம் நிறைந்ததல்லவா?

சின்னப்பு: அப்பா, இப்படிப் பாடுபட்டும் கண்டமிச்சம் என்ன. வெங்காயத்தில் புழு விழுந்துவிட்டது. கடவுளும் முகம்பார்க்கவில்லை.

சுவாந்தர்: படிக்கிறது சுவிசேஷம், முறிப்பது தேவகட்டளை என்றால் கடவுள் முகம்பார்ப்பாரா. 'என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும்' என்ற அவர் வாக்குப் பொய்யா? அடைக்கலம் குருவியைப் போஷிக்கும் எங்கள் பரமபிதா எங்களைக் கைவிடுவாரென்று உன்பாட்டில் இருக்கிறுய்?

சின்னப்பு: ஓஹோ! நீக்கிலாரா... வாரும், வாரும். இவர்தான் எங்கள் பழைய உபதேசியார் சுவாந்தர் அப்பா. சுகம் எப்படி?

நீக்கிலார்: நல்ல சுகமில்லை. கிழமை முழுதும் பாடுபட்டும் வெறுங்கைதான். இதுவும் கடவுள் சோதனையா!

சுவாந்தர்: கடவுள் எப்படி இரங்குவார். கத்தோலிக்கர் என்ற பேர்தான். கடவுள், கடவுள் என்ற பேச்சுத்தான். ஆனல் ஞாயிற்றுக்கிழமை யென்றால் வேலையெல்லாம் உங்கள் பாடுதான். உண்மையில் கத்தோலிக்கர் அல்லாதார் முறையாக ஓய்ந்திருக்கிறார்கள். சிரேதேவியும் குடிகொள்ளுகிறாள். ஆனல் உங்கள் வீட்டில் மூதேவியே வந்தடைகிறாள்... என்றும் பிச்சைப்பெட்டிதான் கையில்... என்ன விபரீதம்!

நீக்கிலார்: என்ன நீர் வேலையில்லாதவர் வம்பளக்கிறீர். பூசைகண்டால் போதாதா? முழுப்பூசை காண வேண்டுமென்றுதானே கட்டளையிருக்கிறது. என்ன எங்களைப் பிழைக்கவிடுகிறீர் இல்லை.

சின்னப்பு: மெய்தான். எழுவயது முடிந்த எல்லாருக்கும் முழுப்பூசை காணக் கடமை யுண்டுதான். ஓய்ந்திருக்க வேண்டுமென்று எங்கே சொல்லப்படுகிறது?

சுவாந்தர்: ஓஹோ! புது வேதக்கார் புலம்புகிறார்கள். உங்களுக்காகப் பரமபரை உண்மையையும் மறைத்துக் கூடப் பார்க்கிறீர்கள். மூன்றாவது தேவகற்பனை 'சருவேசுரனுடைய திருநாட்களைப் பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக' என்றிருக்கிறதே. திருச்சபையின் முதலாவது கற்பனையும் "ஞாயிறு கடன் திருநாட்களில் முழுப்பூசை காண்பாயாக" என்பதே. இதனுல் ஒரு பூசை காண்பதுடன் நாள் முழுதும் உள்ள கடன் தீர்ந்துவிட்டதென்று எண்ணுவது புத்திக்குரியதா? இருபத்திநாலு மணித்தியாலங்களுமா பூசை காண்கிறுய்? பெரியதோர் ஞான நன்மையை நோக்காது திருச்சபை எங்களுக்குக் கற்பிக்குமா? அதுநிற்க, அர்ச். சின்னத்திரேசம்மாளின் தந்தை லூயிஸ் மாட்டின் என்பார் ஞாயிறு கடன் திருநாட்களில் தம் நகைக்கடை திறவாது மூடியதால் கெட்டழிந்துபோனாரா அல்லது அவர் ஞானமின்றிச் செய்தாரா?

நீக்கிலார்: மற்றும் மனிதர் சிட்டுக்குருவிபோல் பறந்து திரியக்கத்தோலிக்கருக்கு மாத்திரந்தானு கட்டளை?

சுவாந்தர்: நாம் ஒரு பரிசுத்த சபைக்குச் சேர்ந்தவர்கள். விசுவாசத்தினல் சீவித்து, வரப்பிரசாதத்தில் வளர்ந்து பரிசுத்த பாப்பாசரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியக் கடமை பூண்டவர்கள். இது நமக்குத் தேடக்கிடையாத ஒரு பெருமை. நாம் கடவுளை ஆராதிக்கவும் சேவிக்கவும் உள்ள பிரதான கடமையை நிறைவேற்றத் திருச்சபை எங்களைக் கட்டாயப்படுத்தாவிட்டால் நிச்சயமாகத் தவறிவிடுவோம். ஆகவேதான் கட்டாயத்தினலாவது நாம் கடவுளைத்தேடவும் அவரது வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளவும் தாயாகிய திருச்சபை எமக்குக் கற்பிக்கிறது. இது எவ்வளவு நன்மையான காரியமாகும். முக்கியமான காரியத்திற் கவனம் செலுத்துவதே விவேகமானது.

சின்னப்பு: நாள் முழுதும் அலுவல் இல்லாமல் ஓய்ந்திருக்க விசர்வந்துவிடும். இது யார் கட்டளை...

சுவாந்தர்: பிரான்ஸ் நாட்டில் 5,850 அடி உயரமான சலேத் என்னும் மலையுண்டு. 1846-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மெலினி, மாக்சிமீன் என்ற இரு குழந்தைகளுக்கு சலேத்மாதா காட்சியளித்தார். அப்போது தம் கைகளை நெஞ்சின் குறுக்கே சிலுவைபோல் வைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாராம்.

இருவரும்: கண்ணீர் வடித்து என்ன சொன்னார்?

சுவாந்தர்: தன் மகனின் திரு இருதயத்தைப் பாவங்கள் துளைக்கின்றன. **தனிப்பட்ட முறையில் ஞாயிறு கடனை அனுசரியாததும், கடவுளின் பேரை எடுத்துத் தேவ தூஷணம் சொல்லுவதும் என் மகனுடைய இருதயத்தை வெகுவாய் வருத்துகின்றன. மக்கள் திருந்தாவிடில் இவ்வுலகிலேயே தண்டிக்கப்படுவார்கள்'** என்று கூறினர். பார்த்தீர்களா! ஞாயிறு கடன் அனுசரிப்பைக் கடவுள் எவ்வளவு வேண்டுகிறார் என்று?

நீக்கிலார்: அது சரி. ஆனல் எங்கள் வயிற்றுப்பாட்டைப் பார்ப்பது யார்? ஞாயிறு வேலை செய்தால் கூலியும் கூடக்கிடைக்குமே. ஏன் அவற்றை இழப்பான்?

சுவாந்தர்: அன்பர்களே! எண்சாண் உடம்பிற்கும் அதில் உள்ள ஒருசாண் வயிற்றுக்கு வேண்டிய ஒரு பிடி சோற்றுக்கும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ இராப்பகலாய் உழைக்கிறோம். அடுத்தநாள் வேலைக்காக சிறிது ஓய்வும் எடுக்கிறோம். ஆனல் நித்திய இன்பத்துக்கும் எம்மைப் படைத்த நித்திய கடவுளின் மகிமைக்குமாகக் கிழமையில் ஒருநாளை விட்டுக் கொடுக்க எங்கள் மனச்சாட்சி ஏற்குதில்லையே. என்ன மதியீனம்? மரணம் வந்தால் காணம் போட்டாலும் தப்பமுடியுமோ. அப்போது ஓய்வின்றி உழைத்தவர்களின்பாடு என்னவாகும். இன்னும் அநேக தொழிலாளர் வேலை நாட்கள் எல்லாம் உழைத்துவிட்டு ஞாயிற்றுக்கிழமையிற்றான் புறம்பானவர்களின் அவசிய வேலைக்கெல்லாம் தவணைபோட்டு வைப்பார்கள். இது தான் கலிகாலத்தின் கிலிகோலம்.

சின்னப்பு: சரி, கடவுளின் மகிமையைத் தேடி இனியாவது ஓய்வுநாட்களைச் சரியாக அனுசரிப்போம். போய் வருகிறோம் அப்பா.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1939

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு சுப்பையா பொன்னம்பலம் கந்தையா
— வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், நாவாந்துறை

1. சவிரிமுத்து பாவிலு கைம்பெண் நீக்கிலாள்,
2. சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை,
3. பெண் சலோமை,
4. மாரிமுத்து ராஜலிங்கம் சவரெட்டினம்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1939-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு அண்டுக் காணி 1961-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை (24-10-61) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2,903/ உம், இன்னும் ரூபா 2,500-க்குப் 14-11-57 தொடக்கம் 14-2-58 வரையும் 100-க்குப் 18% வட்டியும், இன்னும் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவும். கொடுபட்ட ரூபா 100/. செலவு ரூபா 600/ உம்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை நாவலடியும், மறுபிரிவுகளும். ப. நி. இ. 2 உம், கல்வீட்டின் அத்திவாரமும், வீடும், தலைவாசலும், செய்பயிர், வான்பயிர்களும், கிணறும். எல்லை: கிழக்கு — பிலிப்பு மரியாம்பிள்ளை பெண் திரேசம்மாவிற்கும், வயித்தி பெண் தொம்மையின் உரிமைக்காரருக்கும், மறு பேருக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — மரியாம்பிள்ளை பெண் சலோமையின் ஆதனம். தெற்கு — வயித்தி அதிரியானுக்கும், சகோதரனுக்கும், மனுவல் பெண் செல்லாச்சிக்கும், சகோதரனுக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கு.

**செ. இரத்தினசபாபதி,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 11-9-61

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2757

வண்ணார்பண்ணை கிழக்கு சின்னத்தம்பி தம்பு
— வழக்காளி

எதிராக

சரசாலை, சாவகச்சேரி

1. அருணசலம் நவரெத்தினம்
2. மனைவி புவனேஸ்வரி

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2757ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1961 ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை (14-10-61) பிற்பகல் 2 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல்வட்டிரூபா 2,630/உம், 17-3-59 தொடக்கம் 14-10-60 வரைக்கும் ரூபா 2,000/-க்குப் 12% வட்டியும், அதன்பின் கூடிய முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும். இதில் ஏற்பட்ட செலவு ரூபா 155, சதம் 92. செ[illegible]யாத்துச்செலவு ரூபா 36, சதம் 07. [illegible] வரும் செலவு ரூபா 26, சதம் 95. இதில் 1,500 ரூபா கழிவு.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சாவகச்சேரிக் கோயிற்பற்று, சரசாலை இறை 'களவளுத்தி புலம்' நிலப்பரப்பு 3 உம், குளி 12 உம். இதில் பிரிக்கப்பட்ட $1\frac{1}{2}$ பரப்பு செய்பயிர் வான்பயிரும், புதுக் கல்வீடும், விளிம்புச் சுவரும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு—வேதாருணையத்தின் மகள் தங்கமுத்துவின் ஆதனம். மேற்கு—பண்டாரம் வீரகத்தியும், பங்காளரும். தெற்கு—சிவசுப்பிரமணியம் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவுக்கந்தோரில் F. 235/43ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இ. கனகரத்தினம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

---

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### புரட்டாதி மாதம்

**பொதுக்கருத்து:** நேர்மையான அறிவுக்கும், திருச்சபையின் போதனைக்கும் ஒத்தவண்ணம் பொதுசன அபிப்பிராயம் உருவாகும்படியாக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போர் அந்தந்தமக்களின் நாகரீகத்தையும், கலாசாரத்தையும் பாதுகாத்து, அவற்றை விவேகத்துடன் விசுவாசபோதனைகளோடு இணைக்கும்படியாக மன்றாடிக் கொள்வது.

**காலைக்காணிக்கைச் செபம்**

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

## நன்றியறிந்த தோத்திரங்கள்

மகா பரிசுத்தமும், இரக்கமும், அனுக்கிரகமும்நிறைந்த அர்ச். அன்னம்மாளே, தேவமாதாவின் தாயாரே, நீர் எம்மாத்திரஞ் சர்வேசுரனல் நேசிக்கப்படுகிறீர். நீர் கேட்கும் மன்றாட்டை அவர் தள்ளிப்போடப்போகிறதில்லையென்று அறிந்தநானும், அவவின் திருஸ்தலத்தில் இரவு பகலாய் 14நாள் பாயும்படுக்கையுமாய்க் காவல்இருந்தேன். 5 வருஷம் நோய்வாய்ப்பட்டு ஈற்றில் கொழும்பில் இருதய சத்திரசிகிச்சைசெய்து சகல வைத்தியாலும் கைவிடப்பட்ட அடியாளுக்குச் சரீர சுகத்தைத்தந்தருளினீர். எங்கள் குடும்பத்தின் தாழ்மையான நன்றியறிதலை உமக்குச் செலுத்துகிறோம். மென்மேலும் உமது கிருபையை இரந்து, எங்கள் குடும்பத்தின் சார்பாக இதைப் பிரசித்தப்படுத்துகிறோம்.

யோசேப் மரியம்மா,
கேம் ரோட், ஊர்காவற்றுறை.

* * *

திருஇருதயநாதரிடமும், பரிசுத்த சதாசகாய மாதாவிடமும், அர்ச். சூசையப்பரிடமும், அர்ச். அந்தோனியாரிடமும், சகல அர்ச்சியசிட்டர்களிடமும் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக் கிடைத்தது. அவர்களுக்கு நன்றித்துதியாக எனது வணக்கத்தைப் பிரசித்தமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மயிலிட்டி த. சவிரிமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## அருளப்ப பாப்புவின் பிறந்ததினத்தையொட்டி யாத்திரை

அருளப்ப பாப்பரசர் அடுத்த கார்த்திகை 25-ந் திகதி தமது 80-வது பிறந்த தினத்தைக் கொண்டாட விருப்பதை முன்னிட்டுக் கருதினால் மொந்தீனி மிலானிலிருந்து ரோமைக்கு யாத்திரைக் கோஷ்டியொன்றுடன் செல்லவிருக்கின்றார்.

பாப்பரசரின் பிறந்த தினம் கார்த்திகை 25-ம் திகதியாய் இருந்தபோதும் அவர் முடிசூட்டப்பெற்ற தினத்தையே (4-ம் திகதி) யாத்திரைக் கோஷ்டி அனுட்டிக்கும்.

* * *

## பேர்ளின் மேற்றிராணியார் தடைசெய்யப்பட்டார்

பேர்ளின் புதிய மேற்றிராணியாரான பெங்ஷ் ஆண்டவர் அவர்களுக்கு மேற்கு ஜெர்மனியில் வுல்டா என்ற பட்டணத்தில் நடக்கவிருக்கும் ஜெர்மன் மேற்றிராணிமார் சங்கத்துக்கு சமுகமளிக்க உத்தரவுதர மறுத்தனர் கிழக்கு ஜெர்மன் அதிகாரிகள்.

கிழக்கு ஜெர்மனியில் வசிக்கும் பெங்ஷ் ஆண்டகை நியமனம் பெற்றும் தமது மேற்றிராசனத்தை அதிகார பூர்வத்துடன் பொறுப்பேற்கும் முகமாக மேற்கு பேர்ளினிலுள்ள ஆசனக் கோவிலுக்குச் செல்லத் தடுக்கப்பட்டனர். இவர் மேற்கு பேர்ளினில் வசிக்கும் உவால்ரர் அடொல்வ்சுவாமிகளைத் தமது விக்கார் ஜெனறலாய் நியமனம் செய்திருக்கிறார்.

* * *

## இங்கிலாந்தின் புராதனமாதா சேத்திரம்— உவால்ஷிங்கம்

லண்டனிலிருந்து விசேஷ புகையிரதவண்டியில் "யுனிவேர்ஸ்" பத்திரிகைவாசகர்கள் 500 பேர் உவால்ஷிங்கம் மாதாவின் திருசேத்திரத்திற்கு யாத்திரையாய்ச் சென்றார்கள். கொதம்ர்ன் மேற்றிராணியார் பார்க்கெர் ஆண்டகை இந்த யாத்திரைக்குத் தலைமை தாங்கினார். 7,000 கத்தோலிக்க மக்கள் யாத்திரையில் பங்குபற்றினார்களெனக் கணிக்கப்படுகிறது. இங்கிலாந்தின் பல்வேறு கோணங்களிலிருந்தும், ஸ்கொத்லாந்திலிருந்தும் அநேகமக்கள் புகையிரத மார்க்கமாகவும், மோட்டார் வண்டிகளிலும் வந்தனர்.

தேவதாயின் துப்பட்டியெனக் கூறப்படுகிற பரிசுத்த பண்டம் சிற்றாலயத்தில் வணக்கத்துக்கு வைக்கப்பட்டது. இவ்வாண்டு "யுனிவேர்ஸ்" பத்திரிகை நடாத்திய றோமை யாத்திரையின்போது அசிசியில் இத்திருப்பண்டம் நன்கொடையாய் இத்திருப்பதிக்கு அளிக்கப்பட்டது.

யாத்திரிகர்களை வரவேற்றுப் பேசிய பார்க்கெர் ஆண்டகை, பழைய ஆலயத்துக்குப் பதில் அவ்விடத்தில் பேராலயமொன்று தாம் நிறுவவிருப்பதாகக் கூறினார். அதுவரை சிற்றாலயமே கத்தோலிக்கரின் ஆராதனைக்கு உதவும். 1061இல் எமது தேவ அன்னை தாமே இவ்விடத்தில் தமதுபோரால் ஆலயமொன்று அமைக்க வேண்டுமென ஏவியருளினார். கால்நடையாய் வந்த யாத்திரிகர்கள் புராதன ஆலயத்தின் பழைய கட்டிடங்களைப் பார்த்திருப்பர். தேவஅன்னையைச் சங்கியாவிட்டால் ஏற்படும் நஷ்டம் இத்தகையதாகும். அதைப் பரிகரிப்பதும் தபஞ்செய்வதுமே யாத்திரையின் நோக்கமாகும். காலைப்பூசையின்பின் யாத்திரிகர்கள் உவால்ஷிங்கம் கிராமம், இடிந்தமடம் முதலியவைகளைப் பார்வையிட்டனர்.

## வத்திக்கான் நியமனங்கள்

பரிசுத்த தந்தை பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளார்:

**கருதினால் தெஸ்தா** — பரிசுத்த ஸ்தானத்தின் சொத்துக்களைப் பராமரிக்கும் குழுத்தலைவர்.

**கருதினால் டி ஜோறியோ** — வத்திக்கான் இராச்சிய பரிபாலனக்குழுத்தலைவர்.

**கருதினால் லரேனு** — (இவர் ஓர் இஸ்பானியர்) பாவ விமோசன அதிகாரக்குழுத்தலைவர்.

**கருதினால் றிசெறத்**—(ஓர் பிரான்சியர்) திருக்கல்லறை மகிமை விருத்திச் சங்கத்தலைவர்.

**கருதினால் மறெல்லா** — சம்பேதிரு மகாலயக் குருமாருக்குத்தலைவர்.

* * *

## கருதினால் அரசாங்கத்தின்மேல் பழிசுமத்தினார்

1956-ம் ஆண்டில் போலிஷ் அரசாங்கமும், திருச்சபையும் செய்த ஒப்பந்தத்தின்படி பள்ளிக்கூடங்களில் மதபோதனை செய்ய அளிக்கப்பட்ட உரிமையைப் பறித்துவிட்டதாகக் கூறிப் போலிஷ் அரசாங்கத்தை வாரூய்க் கண்டித்துப் பேசினார் போலாந்துக் கருதினால் விசின்ஸ்கி.

ஞானஉபதேச வகுப்புகள் அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருக்க வேண்டுமென்று போலாந்துப் பாராளுமன்றம் சட்டம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறது. "இதற்கு நாம் சம்மதம் கொடுக்க முடியவே முடியாது" என உணர்ச்சிப் பெருக்கால் நடுங்கிய குரலுடன் பேசிய கருதினால் ஆண்டவர், "இளைஞரின் குடியியல் நோக்கை அமைக்கப் பொது அதிகாரிகளுக்கு உரிமையுண்டெனினும், இது கட்டாயமாகச் செய்யக்கூடியதொன்றல்ல. அரசாங்கத்தைக் கண்டனம் செய்ய எனக்கு உரிமை உண்டு. நான் சுதந்திரமுள்ளவன்; அடிமையல்ல, என்றபடியால்தான் இந்த உரிமை எனக்கு உண்டு. மேற்றிராணிமார், குருமார் பொதுமக்கள் நாம் எல்லோரும் சுதந்திரம் உள்ளவர்கள். எமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க உரிமையுள்ளவர்கள்" எனக் கூறினார்.

* * *

## வடறொடேஷியாவில் ஒன்பது கோவில்கள் நாசமாக்கப்பட்டன

அண்மையில் ஏற்பட்ட கடும் கலகங்களின் விளைவாக வடக்கு றொடேஷியாவில் ஒன்பது கத்தோலிக்க ஆலயங்கள் அழிவுக்குள்ளாயின. வடமாகாணத்தின் தலை நகரமாகிய கசமாவில், நிரும்பா கிராமத்திலுள்ள கத்தோலிக்க ஆலயத்திற்கு நெருப்பு வைத்ததற்காக நிரும்பா இளைஞர் பட்டாளத் தலைவர் யோசவ் மார்க்கோ இரண்டரை வருடச் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்.

சம்க்யாவுக்கு அருகே ஒரு கோவிலும் பள்ளிக்கூடமும் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு மாவட்டத்திலுள்ள நாற்பத்திரண்டு பள்ளிக்கூடங்களில் 22 அழிந்தோ, சேதமுற்றோ விட்டன.

பெல்ஜிய அரசாங்கத்தின் மேற்பார்வையிலிருப்பதும், அண்மையில் சுதந்திரம்பெற இருப்பதுமான "றுவண்டா உறுண்டி" பிரதேசத்தில் நடந்துகொண்டிருக்கும் தேர்தல் இயக்கத்தில் கொடுஞ்செயல்கள் மலிந்துகொண்டு வருகின்றன. உகண்டாவிலுள்ள கம்பளாவி[illegible]குச் சென்றிருக்கும் மிஷனரிமா[illegible]நிலைமை படுமோசமாகிக்கொண்டு வருகின்றது.

## முதல் விண்வெளி ஆண்டகை

அமெரிக்காவில் போஸ்டன் நகரின் அதிமேற்றிராணியாரான மேன்மை தங்கிய கஷிங் ஆண்டகை அவர்கள் விண்வெளிப் பயணம் சென்று, விண்கோளம் (கிரகம்) ஒன்றைத் தரிசிக்கும் முதல் ஆண்டகையாக இருப்பாரென்று 'பெரு' நாட்டிலுள்ள பாப்புவின் தூதர் முன்கூட்டிக் கூறியுள்ளார். பரிசுத்த தந்தை கஷிங் ஆண்டகையை பொலிவிய நாட்டின் நற்கருணை மாநாட்டிற்குத் தம் பிரதிநிதியாக நியமித்துள்ளார். "கர்தினால் கஷிங் ஆண்டகை உழைப்பில் ஆர்வம் நிறைந்தவர். இடையறாது வேலை செய்பவர். விண்வெளிக்குச் செல்லும் முதல் ஆண்டகையாக அவர் இருப்பின் அதில் நான் வியப்புறுவதற்கில்லை" என்று அத் தூதர் மேலுங் கூறினார்.

* * *

## பேருவில் பள்ளி மாணவருக்கு மதியபோசனம் அளிக்கும் குரு

தென்னமெரிக்காவிலுள்ள பேரு நாட்டின் அண்டீஸ் பகுதியில் பள்ளி மாணவருக்கு மதியபோசனமளிக்கும் ஏற்பாடொன்றை நடத்தும்படி ஐக்கிய அமெரிக்காவைச்சேர்ந்த மேரிநோல் சபைக் குரு றொபேட் கேண்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆவணி 16 இல் இவ்வேலையை ஒப்புக்கொண்ட குருவானவர் ஐப்பசி மாசத்திற்குமுன் 30,000 பள்ளிமாணவருக்கு இருவேளைப் போசனம்கொடுக்க ஏற்பாடு செய்வார். 1962இல் 70,000 பிள்ளைகளுக்கு உணவளிக்கும் திட்டமொன்றைத் தயாரித்து வருகிறார். திட்டிக்காக்க வாவிக்கரையில் 12,500 அடி உயரத்திலுள்ள புனோபட்டணத்திலும் அதன் சுற்றாடல்களிலுமுள்ள 200 பள்ளிக்கூடங்களில் கற்கும்மாணவருக்கு இத்திட்டம் உதவும்.

இவ்வுணவைத் தயாரிப்பவர்கள் சம்பளம் பெறமாட்டார்கள். **சமாதானத்துக்காக உணவு** என்ற ஐக்கிய அமெரிக்க திட்டப்படி கிடைக்கும் பால்மா, கோதுமைமா ஆதியவைகளை ஆசிரியரும், பெற்றோரும் உணவாகத் தயாரிப்பர். இதில் ஏற்படும் செலவிற்கும், உணவை நேர்மையாக விநியோகம் செய்வதற்கும் கேண்ஸ் சுவாமியார் பொறுப்பாளியாவர். புரொட்டஸ்தாந்த மாணவரும் இவ்வுணவுக்கு உரிமை உடையோராவர். பசிப்பிணியால் வருந்தும் எந்த மாணவருக்கும் இவ்வுணவு கிடைக்கும்.

* * *

## தாவீதரசரின் ஜெருசலேம்

ஆங்கில பூவாராய்ச்சிக் கல்லூரி விவிலிய கல்லூரி ஆகிய நிலையங்களின் பெரும் கலைஞர்கள், தாவீதரசர் கைப்பற்றிய யெருசலேம் நகரைக் கண்டுபிடித்திருப்பதாக நம்புகின்றனர். தோண்டப் பெற்றுள்ள இவ்விடம் கோட்டை மதிற் சுவர்களால் பாதுகாக்கப்பட்டுள்ளதாக உள்ளது. சில்வன் பள்ளத்தாக்கின் மேற்குப் புறத்தில் தோண்டப்பெற்றுள்ள இவ்விடம் அரபு நாட்டின் எல்லையோரத்தில் உள்ளது தாவீது அரசர் இந் நகரை ஜெபு சாதியாரிடமிருந்து கிறீஸ்துபிறப்பிற்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்குமுன்பு கைப்பற்றி, அதைத் தம் தலைநகராக்கினார்.

## மார்ட்டின்டேல் சுவாமியாரின் குருத்துவப் பொன்னாள்

இன்றைய கத்தோலிக்க உலகின் பெரும் எழுத்தாளர்களுள் ஒருவரான யேசு சபையைச் சேர்ந்த சங். சி. சி. மார்ட்டின்டேல் சுவாமிகள் தம் குருத்துவப் பொன்விழாவை இத்திங்கள் 24ஆம் நாள் கொண்டாடி மகிழ்ந்தார்.

* * *

## விரோதிகளாயிருந்த காட்டுமிராண்டிகள் மிஷனரிமாரின் உதவியாளராய் மாறினர்

11 வயதுள்ள பள்ளிமாணவன் சுப்பேட்சுவோனுடைய உறுதியான செயலால் நியூகினியிலுள்ள ஓர் கிராமத்தில் பேய்க்காரியம் ஒழிந்து அக்கிராம மக்கள் மிஷனரிமாரின் துணைவர்களாகிவிட்டனர். பிரான்சீஸ்கு மிஷனரி சபையைச் சேர்ந்த சங். மேரி குவண்ரின் கன்னியாஸ்திரி இச்சம்பவத்தைக் கூறினாள். நியூகினியில் மனந்திரும்புதலுக்குப் பெரிய தடையாய் இருப்பது பழைய காலத்தில் இருந்துவரும் பேய்க்காரியம். கடந்த ஐப்பசியில் சுவோனுடைய கிராமத்தில் ஓர் இரவு ஆண்களெல்லோரும் பயங்கர முகமூடிகள் அணிந்து மேள தாள ஆரவாரத்துடன் பேய்க்காரிய நடனமொன்றை ஆரம்பித்தனர். பெண்கள் இதைப் பார்க்கவே கூடாது. கொடிய அச்சத்தையூட்டக் கூடியது. எனினும், சுவோன் அஞ்சாமல், இது விடயம் பற்றிப் பங்குக்குருவருக்கும், படிப்பிக்கும் கன்னியாஸ்திரிமாருக்கும் அறிவிக்கப்போவதாகக் கிராம அதிகாரிக்குக் கூறினான். அதிகாரி சிறுவனை அடைத்து வைத்தான். இரவு முழுவதும் இந்த மேள தாள ஆரவாரத்தைக் கேட்டுக் கொண்டிருந்த சுவோன் விடிந்ததும் பங்குக் குருவருக்கு அறிவித்தான்.

உடனே குருவானவரும், நான்கு கன்னியாஸ்திரிமாரும், இரண்டு உபதேசிமாருமாக அக்கிராமத்துக்குச் சென்றனர். பேய்க்காரியம் நடந்த இடத்தில் செபமாலை செபித்தனர். பின்பு குருவானவர் அக்கிராமத்தில் பிசாசுகளின் ஆட்சி செல்லாதிருக்க அதை முழுவதும் ஆசீர்வதித்தார். இவ்வேளை கிராமத்தவர் ஒழித்துவிட்டனர். ஆயினும், சில நாட்களின்பின் அங்கு நடந்த ஞானஒடுக்கப் போதனைகளைக்கேட்கத் திரண்டுவந்தனர். சிறுவனின் திடம் அவர்களுக்கு வெட்கத்தைத் தந்தது. 1,000 பேர்கொண்ட வறப்புச்சாதியினர் எல்லோரும் வேதத்தில் சேர்ந்து கொண்டது மாத்திரமல்ல, தற்போது தமது அயற்கிராமத்தவர்களை மனம்திருப்புவதற்கும் துணை புரிகின்றனர்.

## லூர்து புதுமை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்புதுமைவரத்தைஆராய்ந்து அலசிப் பார்த்து, பிரபல மருத்துவர்குழுவின் கருத்தறிந்து, இது உண்மையிலேயே ஒரு புதுமைதான் என்று கூறப் பதினொரு ஆண்டுகள் பிடித்துள்ளன. இதிலிருந்து, தகுந்த ஆராய்ச்சியின்றிக் கண்டதையும் கேட்டதையுமெல்லாம் புதுமையென்று நம்பிவிடக்கூடாது, நம்பிப் பிரகடனம் செய்தலாகாது என்பது தெளிவு.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday Septemder 16-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org